

# எழுச்சி




தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் உத்தியோக பூர்வமான ஏடு ...... ரூ.2/—

எழுச்சி 2 குரல் 1 TELO— Tamil Eelam Liberation Organization ஜூலை — ஆகஸ் — செப்டம்பர் 1985


# தொடரும் போர் நிறுத்தம்?

**போர் நிறுத்தம் காலவரையின்றி தொடரும் என ஸ்ரீலங்கா அரசு அறிவித்துள்ளது. இப்போர் நிறுத்தத்தை கண்காணிக்கவென ஒரு குழுவை அமைப்பதிலும் ஈடுபட்டுள்ளது. ஆனால் அரச பயங்கரவாதிகளின் வன்முறைகள் தான் ஓய்ந்தபாடில்லை. இந்நிலையில், போர் நிறுத்தம் தொடருமா? சுமுகமான சூழ்நிலை ஏற்படுமா? இந்திய அரசின் முயற்சிக்கு சிறிலங்கா அரசு மதிப்பளிக்குமா?**

ஸ்ரீலங்கா அரசானது, தொடர்ந்தும் போர் நிறுத்தத்தை கடைப்பிடிக்கும் என ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனா அறிவித்துள்ளார்.

இவரின் இக்கூற்று எந்தளவு தூரத்திற்கு உண்மையென நாம் ஆராயவேண்டிய தேவையே கிடையாது. ஏனெனில், நடந்து முடிந்த போர் நிறுத்தத்தில் நடந்த சம்பவங்கள் நல்ல ஆதாரமாக இருக்கின்றது.

போர் நிறுத்தத்தை தாம் காலவரையின்றி தொடர்வோம் என வானொலியிலும், பத்திரிகைகளிலும் அட்டகாசமாக அறிவித்து விட்டால் மட்டும் போதும் என மனப்பாங்கு கொண்டவர்கள் போலும் இவ் இனவெறி அரசினர். அரச பயங்கரவாதிகள் நிகழ்த்தும் வன்முறைகள் இன்னும் ஓய்ந்தபாடில்லை. வன்முறைகளை ஒரு ஓய்வுக்குக் கொண்டு வருவதற்கான இம்மியளவு முயற்சியைக் கூட எடுக்கவில்லை மாறாக, விதண்டாவாதமும், தன் செயலுக்கு நியாயம் கற்பிப்பதிலேயே ஸ்ரீ லங்கா அரசு தனது காலத்தை செலவழித்து வருகின்றது.

இந்தியாவின் நல்லெண்ண முயற்சியாக, இலங்கையின் இனப்பிரச்சனையை ஒரு தீர்வுக்கு கொண்டு வரும் முகமாக மிகவும் பிரயத்தனத்துடன் எடுத்த போர் நிறுத்தத்தை ஸ்ரீ லங்கா அரசு சரியாக கடைப்பிடிக்காதுவிடினும், தன் முயற்சிகளில் இந்தியா தளர்ந்து விடவில்லை.

தனது அயல்நாடான இலங்கையில், அங்குள்ள இனப்பிரச்சனையை சாட்டாக வைத்துக் கொண்டு வல்லாதிக்க சக்திகள் நுழைந்து இந்து மகா சமுத்திர பிராந்தியத்தை ஒரு போர்ப் பிராந்தியமாக மாற்றிவிட முனைவதை; சமாதானத்தையே விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கும் இந்தியா எந்நாளும் விரும்பாது.

இந்நிலையில், இலங்கையின் இனப்பிரச்சனையானது, இந்தியாவிற்கே ஒரு தலையிடியாகும். மற்றும், ஸ்ரீ லங்கா அரசின் அத்துமீறிய செயல்களும் (தமிழக மீனவர்கள் மேல் ஸ்ரீ லங்கா அரச இராணுவம் வன்முறை பிரயோகித்தமை) இந்திய அரசுக்கு இதில் தலையிட வழிவகுத்தது.

இந்நிலமைகளை நாம் நோக்கும்போது, இலங்கைத் தமிழினப் பிரச்சனையானது இந்தியாவுடன் பின்னிப் பிணைந்துள்ளதை காணக் கூடியதாயுள்ளது. இப் பிரச்சனைக்குள் இந்தியாவின் தலையீட்டை மறுப்பவர்கள், புறநிலை அரசியல் காரணிகளை புரிந்து கொள்ளாதவரே எனலாம்.

சர்வதேச அரங்கில், எம்மை ஆயுதப்பிரியர்களாக இனங்காட்டி; தம்மை ஒரு சமாதானப் புறாவாக காட்டிவிட முயன்று வந்த ஸ்ரீ லங்கா அரச பீடத்தினர், நாம் போர் நிறுத்தத்தையும் கடைப்பிடித்து, பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டதன் மூலம் தங்கள் தந்திரங்கள் பயனற்று விட்டமையை நினைத்து அங்கலாய்க்கின்றனர். ஆனாலும் ''விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை'' என்ற கதையாக தங்கள் இராணுவம் கட்டுப்பாடாகவே தான் இருந்தது, பயஙகரவாதிகளின் தாக்குதலுக்கு எதிர் தாக்குதல் தான் நாங்கள் செய்தோம் என வாய்கிழிய கத்தி வயிற்றைப் புண்ணாக்கிக் கொண்டுள்ளனர். ஏனெனில் இவர்கள் வாய் கிழியக் கத்தினாலும், இவர்களின் இனவெறித் தன்மையையும், அப்பாவி மக்களைச் சுட்டுவிட்டு அவர்கள் பயங்கரவாதிகள் என கூறிக் கொண்டிருப்பதையும் நன்றாகவே உலக நாடுகள் புரிந்துள்ளன.

அண்மையில் திரிகோணமலை, நிலாவெளியில் அகதி முகாம்களில் இருந்த தமிழ் மக்களை சுட்டுக் கொன்றுவிட்டு, பயங்கரவாதிகளின் முகாம் அழிக்கப்பட்டதாகவும், பயங்கரவாதிகளைத் தான் தாங்கள் சுட்டுவிட்டோம் எனவும் கூறிக் கொண்டார்கள்.

இன்று திரும்பவும் தாங்கள் போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்போம் என அறிவித்து, அப்போர் நிறுத்தத்தை கண்காணிப்பதற்காக ஒரு குழுவையும் நியமித்துள்ளனர்.

குழம்பிவிட்ட சூழ்நிலையை மாற்றி, ஒரு சுமுகமான சூழ்நிலையை தோற்றுவிக்க இந்திய அரசு; ஸ்ரீ லங்கா அரசுடனும், விடுதலை இயக்கங்களுடனும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகிறது.

இப்பேச்சு வார்த்தைகள் எவ்வளவு தூரம் பயனளித்து இனவெறி அரசின் வன் செயல்கள் நிறுத்தப்பட்டு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியதாகும்.

# வவுனியா போலிஸ் நிலையம் தகர்ப்பு
# 75 அதிரடி போலிஸ் பலி

## ராக்கெட் தாக்குதலில் இராணுவ ஹெலிகொப்ரர் அழிக்கப்பட்டது.

**29.9.85 அன்று வவுனியா பொலிஸ் நிலையம் மீது ரெலோ போராளிகளின் தீர மிக்க தாக்குதலால் 75க்கு மேற்பட்ட அதிரடி பொலிசார் மாண்டனர். ராக்கெட் தாக்குதலினால் கட்டிடம் பலத்த சேதமுற்றது. இராணுவ ஹெலிகொப்ரர் விமானம் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது. 10க்கு மேற்பட்ட இராணுவ வாகனங்களும் முற்றாக அழிக்கப்பட்டது.**

**மற்றும், பொலிஸ் நிலையம் நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் பாதையில் வைக்கப்பட்ட கண்ணி வெடியில் சிக்கியதில் 14 இராணுவத்தினர் மாண்டனர்.**

இவ் இனவெறி அரசின் இனவெறிச் செயல்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவர தமிழ் பேசும் மக்களின் விடுதலையை வென்றெடுக்க, மக்கள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க — அதற்கான தயாரிப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி தீர்க்கமான சிந்தனையுடனும், தீவிரமாகவும் செயல்பட்டுவரும் எமது இயக்கமான தமிழீழ விடுதலை இயக்கத்தின் வீர மிக்க போராளிகளினால்

**வவுனியா நகரசபை கட்டிடத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் தகர்த்தெறியப்பட்டது.**

இந்நிலையம் வடமாகாணத்தில் உள்ள மிகப் பெரிய பொலிஸ் நிலையங்களில் ஒன்றாகும். ரெலோ போராளிகளின் இத் தாக்குதலில் 75க்கு மேற்பட்ட பொலிஸ் கொமாண்டோக்கள் பலியாகினர். ராக்கெட் தாக்குதலில் கட்டிடத்தின் பல பகுதிகள் பலத்த சேதமுற்றன. இராணுவ ஹெலிகொப்ரர் விமானமும் சுட்டு சேதப்படுத்தப்பட்டது.

மற்றும், அங்கிருந்த அத்தனை வாகனங் (ஜீப், ட்ரக்குகள்)களும் சேதப் படுத்தப் பட்டது.

மேலும், இத் தாக்குதல் நடந்த இடத்தை நோக்கி ஜீப்புகளிலும், ட்ரக்குகளிலும், கவச வாகனங்களிலும் விரைந்து வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் வரும் பாதையில் **அதாவது, கண்டி வீதியில் வவுனியா தமிழ் மகா வித்தியாலத்திற்கு முன்பு** முன் கூட்டியே எதிர் பார்த்து வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடியில் சிக்கியதில் ஸ்தலத்திலேயே 14 இராணுவத்தினர் மாண்டனர்.

போர் நிறுத்தத்தை மீறி, வவுனியாவிலும் திருகோணமலையிலும், மற்றும் சில

2 ம் பக்கம் பார்க்க

ரெலோவின் புரட்சிகர மக்கள் எழுச்சிக் குரல்

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# விடுதலைக் குரல்

இந்திய அரசின் பெரும் முயற்சியில், நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட போர் நிறுத்தத்தை சிறிலங்கா அரச இராணுவத்தின் மீறிய செய்கை ஒன்றும் வியப்புக்குரிய தல்ல!

ஏற்கனவே ஆங்காங்கு சிலசில இடங்களில் தனது இனவெறியை வெளிக்காட்டி வந்த அரச இராணுவம், வவுனியாவில் 100க்கு மேல் அப்பாவித் தமிழ் மக்களை சுட்டுக் கொலை செய்ததன் மூலமும், திருகோணமலையில் 200 பேருக்கு மேற்பட்ட தமிழ் மக்களைச் சுட்டுக் கொன்ற தன் மூலமும், எக்கட்டுபாடும் இவ்இனவெறி இராணுவத் திற்கு உகந்ததல்ல என்பதை நிரூபித்துவிட்டது.

இக்கட்டுப்பாடற்ற இராணுவத்தை நம்பி, போர் நிறுத்தம் செயல்படுத்துவது தான் எவ்வாறு?

இவ் இராணுவத்தின் செய்கையைக் கட்டுப்படுத்தாத வரையில், பேச்சு வார்த்தையை தொடருவது தான் எவ்வாறு?

கட்டுப்பாடற்ற இனவெறி இராணுவம் தமிழீழப் பகுதி களில் படுகொலைகளை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக் கும் போது, தொடர்ந்தும் இவ் இனவெறி அரசுடன் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதென்பது கேவலமான விடயம் ஆகும்.

தனது இராணுவத்தையே கட்டுப்படுத்த முடியாத அரசு, எப்படித் தான் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினையைத் தீர்த்துவிட முடியும்.

மேலும், தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை முற்றாக இவ் அரசு ஒருபோதும் தீர்த்துவிட முடியாது தீர்த்துவிடவும் மாட்டாது.

ஏனெனில், இப்பிரச்சினையை வைத்துக் கொண்டே தனது அரசை காப்பாற்றுகின்றது. இப்பிரச்சினை அற்றுப் போனால் தொடர்ந்து தங்கள் அரசு நிலைக்காதென்பது இத்தரகு முதலாளித்துவ அரசுக்கு நன்றாகவே தெரியும்.

இந்நிலையில் பேச்சு வார்த்தை என்பது, சிறிலங்கா அரசு உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவ முயற்சிக்கும் ஒரு நாடக மேடையன்றி, வேறல்ல.

நாடகங்கள் நடத்துவதில் கைதேர்ந்த சிறிலங்கா இனவெறி அரசின் எண்ணம் கருத்துகளும், செயற்பாடு களும் வெளிப்படையாகத் தெரிந்த நிலையில், நாம் தொடர்ந்து பேச்சு வார்த்தைகளில், எவ்வளவு தூரம் கலந்து கொள்வதென்பது வரலாறு எமக்கு விளக்கம் தரும்.

சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு தமிழ் இனத்திற் கெதிராக சிங்கள பூர்ஷ்வாக் கட்சிகள் அரசு கட்டில்களைக் கைப்பற்றும் நோக்கினில் செயற்பட்டு, இனவாதத்தை சிங்கள மக்களிடையே விதைத்து அதன் மூலமே தங்கள் சுயலாபங்களை அடைந்தனர்.

இக்காலத்தில் சுயலாபம் கருதியே இயங்கி வந்த தமிழ் பூர்ஷ்வாத் தலைமைகள், தமிழ் இனத்தின் பாரம்பரிய நிலங்கள் திட்டமிட்ட குடியேற்றங்களினால் பறிக்கப்பட்ட சூழ் நிலையையும், அரசினரின் இனவாதப் போக்கினாலும் விகல்பமடைந்து பல ஒப்பந்தங்களையும், பேச்சுவார்த்தை களையும் நடத்தினர். ஆனால், இவர்களின் சுயநலப் போக்குத் தன்மையினால், தொடர்ந்த எதிர்ப்பும் போராட் டங்கள் நடத்துதற்கு முடியாதவர்களாகி விட்டனர்.

ஆனால், இவ் ஒப்பந்தங்களும், பேச்சுவார்த்தைகளும் ஏதுவித பயனுமளிக்காது, பயனற்ற குப்பைகளாக்கப் பட்டது என்றும் தமிழ் மக்கள் அறியாததல்ல.

மேலும், இனவாதத் தீயை மூட்டி நாடெங்கும் இனக் கலவரங்களைத் தூண்டி விடவும் இவ் அரசு தானே முன் னின்று பங்களித்தது வெளிப்படை உண்மையாகிவிட்டது.

1958, 1977, 1981, 1982, 1983 எனும் வரிசை யாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் இனக்கலவரங்களும், இதனால் நாடெங்கும் அப்பாவித் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டும், உடமைகள் அழிக்கப்பட்டும், கொள்ளை யடிக்கப்பட்டும், கடைகள், கோயில்கள் எரிக்கப்பட்டும்... இப்படிப்பல.

இப் பேச்சுவார்த்தையை எதிர்த்து தமிழ் பேசும் மக்கள், தமிழீழத்தின் பல பகுதிகளில் ஆர்ப்பாட்ட ஊர் வலங்கள் நடாத்தியது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

# விடியலில் வருவேன் கைகுலுக்க......



மேல் உடல் மூடாதசேலைக்கட்டு
மலையகத் தேயிலைச் செழுமை
லகரமும், ளகரமும் கருச்சிதைந்த
ஈழத்து மண்ணுக்கே ஒட்டாக தமிழ்!
இருந்தும் அம்மொழியில்
பதநீர் இனிமை......
உதடுகள் அவளை அன்பாய் பார்த்தும்
உள்ளம்
அண்மைக் காலங்களாய் அன்னியப்படுத்தியே....

இன்று ஏதோ ஒரு பிசுபிசுப்பு!
உயிருக்கு அபயம் கேட்டு
இல்லை உடன் பிறந்தவர்களின்
மானத்திற்கு போர்வை கேட்டு
விண்ணப்பம் இன்றியே.....
அகதிப்பதவிக்கு இந்தியக் கரைக்கு விரைகையில்
இராணுவப் பார்வையில் எப்போதும்
எம்பயணம் தடைப்படும்....
மனது அலைகிறது
அவளிடம் சொல்லிச் செல்ல

இருளின் கடுமை!
கடல்காற்றின் குளிர்மை!
இவற்றைத் தகர்த்து அலைகளைக் கிழிக்கின்ற
இயந்திரப் படகின் அணிவகுப்பு......
சிலது நங்கூரத்தில் நர்த்தனம் செய்ய
அதோ! ஒரு உருவம்!
லந்தர் விளக்கொளியில்.....
முகமிழந்து போனவர்களையெல்லாம்
சோதனை போட்டுக்கொண்டே வருகிறது!
உருவம் என்பார்வையில் தெளிவாகிவிட்டது!
ஆமாம் அது மார்பை மூடாத
என்னைக் கண்டு கொண்டதில் கைவிளக்கு
நிலத்தில் ஓய்வெடுக்க....
அவள் விழிப்பிரவாகத்தில் விசும்பல்சேர

மீன் பிடிக்கத்தான் முதலில்
உங்கள் மண்ணுக்கு வந்தோம்!
காலம் கரைந்ததில் உங்களையே....
உறவென்று கலந்துபோனோம். இன்று?
பழகிய காலத்தை....
எங்கள் சிப்பாய்களின் கொடூரத்தால்
நீங்கள் மறந்துவிட்டதாக....
ஒருவார்த்தை சொல்லிக்கொள்ளாமல்
புறப்பட்டு விட்டீர்களா, உங்கள் மண்ணை விட்டு
ம்... எப்படிப் பழகினாலும் நீ...
புரிகிறது நான் சிங்களப் பெண்தான்
ஆனால் உங்கள் வர்க்கத்துப் பெண்
உங்கள் பயணத்திற்கு விடை தருகிறேன்!
நீங்கள் திரும்பும் போது
நான் இல்லை என் வர்க்கமே
உங்களை எதிர் அழைக்கும்!
மொழிதான் சிதைந்து வந்தாலும்
அவள் உணர்வு தெளிவானது!

நங்கூரம் எடுப்பதற்குள்......
அவளுக்கு பதில்சொல்ல முடியவில்லை
ஆனால் இப்போது......
உணர்ந்து விட்டேன் எங்களை சிதைக்க விரும்புவது
ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள்!
கைகுலுக்க விழைவது "பாட்டாளிவர்க்கம்"
மீண்டும் சந்திக்க விரும்புவது
அவளை மட்டுமல்ல ஆயிரம் ஆயிரம்
பாட்டாளி வர்க்க சிங்களத் தோழர்களை
அப்போது......
நிச்சயமாக ஏகாதிபத்திய கருமை
நீங்கியிருக்கும்
செந்சாந்து பூசிய கிழக்கும்....

—கார்மேகம் நந்தா

இதிலிருந்தே, தமிழ் பேசும் மக்களின் விடுதலை உணர்வும், தமிழீழத்தில் அசையாத நம்பிக்கையும் வெளிப் படையாகவே தெரிகின்றது.

இவ்வளவு கால இழப்புகளுக்கு இவ்வின வெறி அரசு தரும் சிறு, சிறு சலுகைகள் எமக்கு எவ்விதத்திலும் விடுதலையைத் தராது. மாறாக, புதிய வடிவத்தில் ஒடுக்கு முறையை நிகழ்த்த இடமளிக்கும் பலம் வாய்ந்த அத்திவாரமாகவே அமையும்.

இன்றைய புரட்சிகர நிலைமையை, புரட்சிக்குரிய சூழ் நிலையை உணராமற் போவோமாயின் புரட்சிக்குரிய சரியான சந்தர்ப்பத்தை நாம் இழக்கின்றோம். என்ப தாகவே அமையும், மேலும், இச்சந்தர்ப்பத்தை தீர்க்கமாக உணர்ந்து செயற்படாவிடின் தமிழ் பேசும் மக்களை படுகுழிக்குள் வீழ்த்துவதற்கு நாமே குழிதோண்டிக் கொடுப்பதாகவே அமையும்.

இது தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கும் மிகப்பெரிய வரலாற்றுத் துரோகமாகும்.

1ம் பக்கத் தொடர்ச்சி

இடங்களிலும் நூற்றுக்கணக் கான தமிழ் பேசும் மக்களைப் படுகொலை செய்து வரும் இவ் இனவெறி அரசுக்கு இந்தாக்குதல் மூலம்: "நாம் அமைதியை குழப் பும் நடவடிக்கைகளில் என்றும் இறங்க மாட் டோம். ஆனால், தொடர்ந்து கொண்டிருக் கும் எமது மக்களின் அழிவைப் பார்த்துக் கொண்டு வெறுமனே கை கட்டிக் கொண்டு சும்மா இருந்து விடமாட்டோம்" என அறியத் தருகிறோம்.

# இந்தியாவின் நிலைப்பாடும்,

# திம்பு பேச்சுவார்த்தையில் நடந்தவையும்...

இன்று, தமிழ் ஈழ விடுதலை அமைப்புக்களுக்கும், சிறிலங்கா இனவெறி அரசுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கும் போர் நிறுத்த ஒப்பந்தமானது இலங்கையின் தமிழினப் பிரச்சனைக்கான தீர்வுகாண பேச்சுவார்த்தைக்கு ஒரு சுமுகமான காலத்தை ஏற்படுத்துவதற்கேயாகும்.

இந்திய வெளியுறவுச் செயலர் ரொமேஷ் பண்டாரியின் சிறிலங்கா விஜயத்தின் பின் J.R ஜெயவர்த்தனாவும், ரொமேஷ் பண்டாரியும் விட்ட கூட்டறிக்கையில் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்ட இக்கோரிக்கையும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியதாகும்.

ஆனால், இவ் அறிக்கை விட்ட கையுடனேயே ஜே.ஆர். பாகிஸ்தான் விஜயம் செய்து, அங்கு பாகிஸ்தானின் கொடுங்கோலன் ஜியா–உல் – ஹக் உடன் கரமிணைத்த திருப்தியில், இலங்கையின் தமிழினப் பிரச்சனையானது உள்நாட்டுப் பிரச்சனையே, தமிழ்த் தீவிரவாதிகளை ஒடுக்கியே தீருவேன் என அதிகாரக் குரலில் முழக்கமிட்டது இன்னமும் மறந்துவிடவில்லை.

அத்துடன், தாட்சரின் சிறிலங்கா விஜயத்தின் போது பிரிட்டிஷ் படை உதவி கேட்டதும் உட்படவே.

இங்கு, இந்தியா இலங்கைத் தமிழர் சார்பாக எடுத்துரைத்த கருத்துக்களும், இந்தியாவின் நிலையும் குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கு வலைவிரிப்பு

இந்து சமுத்திரப் பிராந்தியத்தை வல்லரசுகளின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட ஒரு அமைதிப் பிராந்தியமாக ஆக்குவதற்கே அக்காலந்தொட்டு தனது முயற்சிகளை எடுத்து வருகின்றது. இந்தியாவின் இம் முயற்சிகளுக்கு பெருந்தடையாக, அமெரிக்க வல்லாட்சியும் தனது ஏகாதிபத்தியக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் நோக்கில் செயற்பட்டு வருவதும் சராசரி நிகழ்வுகளிலொன்றாகும்.

ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகள் தங்களது பொருட்களை சந்தைப்படுத்தும் முகமாக மூன்றாம் மண்டல நாடுகளை தங்கள் கைக்குள் போட்டுக்கொண்டு வருவதற்கு பெரும் முயற்சிகள் எடுத்து வருவதும், பல நாடுகளை தங்கள் பிடிக்குள் வைத்துக் கொண்டு அதாவது, காலனித்துவ, நவகாலனித்துவ போக்கைக் கைக்கொண்டு வருவதும் வெளிப்படையாகும்.

இதே நிலையே, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நவ காலனித்துவப் பிடிக்குள் சிறிலங்கா முற்றாகச் சிக்குண்டுள்ளது. இனவெறியன் ஜே.ஆர்.உம் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாகத் திகழ்ந்து, ஏகாதிபத்தியப் பிடியில் உள்ள மற்ற நாடுகளின் தலைவர்களை விட தனது எஜமான விசுவாசத்தை அதிகமாகவே வெளிக்கொணர்ந்து வருகின்றனர்.

தெற்காசியப் பிராந்திய நாடுகளில் மிகப்பெரிய நாடாகவும், மக்கள் தொகை அதிகமாக உள்ள நாடாகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றது இந்தியா. இந் நிலையினால் இந்தியாவை வளைத்துப் பிடித்துவிட பல யுக்திகளையும் (சாம, பேத, தானம் உட்பட) ஏகாதிபத்திய நாடுகள் கையாண்டு வருவதும் வெளிப்படையாகும். இன்று மிகப் பெரிய வல்லரசான அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியாவை விழுங்கி ஏப்பம் விட்டுவிட எடுத்த முயற்சிகள் பலனளிக்காதவிடத்து, தனது இராணுவப் பலத்தினை பிரயோகிப்பதற்கான முயற்சிகளை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

டியூகோகார்சியாத் தீவில் சக்தி மிகுந்த ஏவுகணை நிறுவியிருப்பதும், பாகிஸ்தானின் ஆயுத பலத்தை அதிகரித்து வருவதும், இன்று சிறிலங்காவை இந்தியாவுக்கு எதிரான முயற்சிகளை எடுக்கத் தூண்டி வருவதும் தனது இராணுவப் பலத்தை இந்தியா மேல் பிரயோகிப்பதற்கான முன் முயற்சி செயல்பாடுகளாகும்.

இந்தியாவுக்கு கவலை தரும் இம் முயற்சிகள், அதாவது, இலங்கையின் இனப் பிரச்சனையை சாட்டாக வைத்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் யுத்த மேகங்கள் சூழ ஆரம்பித்திருப்பது, இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக அமைவதாகும்.

இந் நிலைமையை இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி சோவியத் விஜயத்தின் போது பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருப்பதும் கவனத்திற்கு எடுக்கப்படவேண்டியதே.

## இலங்கை இனப்பிரச்சனை இந்தியாவின் அயல்நாட்டு உள்விவகாரம் அல்ல.

இலங்கையின் தமிழினப் பிரச்சனைக்கான எந்தவொரு அரசியல் தீர்வையும் அளிக்க விரும்பாத இனவெறியன் ஜே. ஆரின் அரசு தமிழினத்தையே அழித்துவிடுவதையே இலங்கையின் தமிழினப் பிரச்சனைக்கான தீர்வாக முன்வைத்துள்ளது. இதன் நடவடிக்கையாக வெளிநாடுகளிலிருந்து பல பயங்கர நவீனகர ஆயுதங்களையும், தந்திரோபாயங்களையும் கடனாக வாங்கிக்கொள்வதிலும், வன்முறைகள், அழிவு, நாசவேலைகள் செய்வதில் பெயர் பெற்ற உலகப் பயங்கரவாதிகளான மொசாட் (Mosad) SAS, போன்றவற்றுடன் தனது தொடர்பை பலப்படுத்தி வருகின்றது.

சிறிலங்கா அரசின் அராஜக நடவடிக்கைகளின் விளைவால், தமது சொந்தப் பூமியிலேயே வாழ முடியாத நிலையில் அகதிகளாகி ஆயிரக்கணக்கான தமிழ் பேசும் மக்கள் நாளும் இந்தியாவில் தஞ்சமடைந்து கொண்டிருக்கின்றனர்.

நாளும் அகதிகளாககி இந்தியாவில் தஞ்சமடைந்து கொண்டிருக்கும் தமிழ் ஈழ அகதிகளின் கண்ணீர்க் கதைகள் தமிழக மக்களின் உணர்வுகளை மிகவும் பாதித்துள்ளது. மேலும், பொருளாதார ரீதியிலான நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டிய நிலையை இந்தியா எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது.

இந் நிலையில் இந்தியா இலங்கைத் தமிழினப் பிரச்சனையை அயல்நாட்டு உள் விவகாரம் என ஏற்றுக் கொள்ள முடியாத நிலையையே தோற்றுவித்துள்ளது!

இதையே இந்தியப் பாராளுமன்றத்தில், இலங்கைத் தமிழர் பிரச்சனை இந்தியாவின் தேசியப் பிரச்சனை என குர்சித் ஆலம்கான் குறிப்பிட்டார். மேலும், இப் பிரச்சனைக்குத் தீர்வுகாணும் மூலமாக, இராணுவம் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து வாபஸ் பெறப்பட வேண்டும் எனவும், தமிழ்ப் பகுதிகளில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும், சிறையிலடைக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் எனவும் கோரியிருந்தனர்.

## இந்தியாவுக்கு அங்கீகாரம்

இந்தியாவிற்கு மிகப் பெரிய தலையிடியைக் கொடுத்துக் கொண்டிருக்கும் இலங்கை தமிழினப் பிரச்சனையைப் பற்றியதான தீர்வை அதாவது பிரச்சனையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை இந்தியாவே முன்னின்று செய்வதற்கு எல்லா நாடுகளும் அங்கீகாரம் அளித்துள்ளன. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற ஏகாதிபத்திய நாடுகள் கூட அங்கீகாரம் அளித்துள்ளன.

ஆனால், இவர்களின் செயல் வாயளவில்தான் என்பது சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசுக்கு ஆயுதம் வழங்கிக் கொண்டிருப்பதில் இருந்து தெரிகின்றது.

மேலும், இவ் ஏகாதிபத்திய நாடுகள் தங்களின் மூலதனங்கள் இலங்கையில் முடக்கப்பட்டுள்ளதால் அங்கு நடைபெறும் போராட்டங்களினால் தங்கள் மூலதனத்துக்கு ஆபத்து வந்துவிடக் கூடாதென்பதற்காக தமிழினப் பிரச்சனையை பேச்சுவார்த்தையாலேயே தீர்க்க வேண்டும் என வலியுறுத்துகின்றன.

## பேச்சு வார்த்தை முயற்சி

இன்று, தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாக உலக அரங்கினில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த தமிழ் பூர்ஷ்வாத் தலைமைகள் (கூட்டணியினர்) உடன் பேசுவதில் எவ்வித பயனுமில்லை என உணர்ந்த சிறிலங்கா அரசு தமிழ் ஈழ விடுதலை போராளிகளுடன் பேச்சுவார்த்தையிலீடுபடுவதே பயனுடையது என உணர்ந்து இந்திய அரசின் உதவியை நாடியது.

பேச்சு வார்த்தைக்கான முயற்சியில் பாஸிஸ வெறியன் ஜே.ஆர். இந்திய பிரதமர் ராஜீவ்காந்தியுடன் தரையிலும், வானத்திலும் தங்கள் பேச்சுவார்த்தைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான அமைதியான சூழ்நிலையைப் பேணுவதற்கு இரு தரப்பினருக்குமிடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

## தற்காலிக போர் நிறுத்த நிபந்தனைகள்

இவ் ஒப்பந்தத்தில் தற்காலிக போர் நிறுத்தத்தின் அமைதியான சூழ்நிலையை உருவாக்க நாம் சில நிபந்தனைகளை விதித்தோம்...

அவையாவன:

1. தமிழ் மீனவருக்கு விதிக்கப்பட்ட தடைகளான கண்காணிப்பு வலயம் தடை செய்யப்பட்ட பிரதேசம் ஆகியன உடனடியாக நீக்கப்படல் வேண்டும்.
2. பொது மக்களுக்கு தந்த போக்குவரத்துத் தடைகள் நீக்கப்படல் வேண்டும்.
3. உணவு, எரிபொருள்களில் தடைகள் முற்றாக நீக்கப்படல் வேண்டும்.
4. ஊரடங்கு சட்டம் முற்றாக அகற்றப்படல் வேண்டும்.
5. புதிய சிங்களக் குடியேற்றங்கள் அனைத்தையும் முற்றாக அகற்றுவதுடன், எமது பாரம்பரிய பிரதேசங்களில் ஏற்கெனவே குடியேற்றப்பட்ட சிங்கள மக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
6. இராணுவ அடக்குமுறைகள் யாவும் முற்றாக நீக்கப்பட வேண்டும்.
7. கைது செய்து காவலிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும்.

இந் நிபந்தனைகளை சிறிலங்கா அரசு ஏற்றுக் கொண்டது. ஆனால் உண்மையில் நிறைவேற்றிவிட்டதா என்றால், அதுதான் இல்லை 12 வாரங்கள் நடக்கும் போர் நிறுத்தத்தின் கடைசி வாரங்களில் நிகழ்த்தவிருந்த பேச்சுவார்த்தை பூட்டான் தலைநகர் திம்புவில் விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகளுக்கும், சிறிலங்கா அரச பிரதிநிதிகளுக்கும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகி எத்தீர்வுமின்றியே ஆகஸ்ட் 12ல் அடுத்த கட்டப் பேச்சுவார்த்தைக்கான திகதி பின் வைக்கப்பட்டது.

## முதலாம்கட்ட பேச்சுவார்த்தை

இனி, திம்புவில் நிகழ்ந்த பேச்சுவார்த்தையில் அரசு தரப்பினரும் விடுதலை இயக்கத் தரப்பினருக்கும் எடுத்தியம்பிய கருத்துக்களை சுருக்கமாகப் பார்ப்போம்.

அமைதியான சூழ்நிலையில் ஆரம்பமான இப் பேச்சுவார்த்தை போர் நிறுத்தம் பற்றியதாகவே அமையும் என இருதரப்பிலும் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆயினும், பேச்சுவார்த்தையின் கட்டங்களில் வட்டமேசை மாநாட்டில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியினரால் நிராகரிக்கப்பட்ட இணைப்பு B எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ் இணைப்பு B பற்றிய பிரஸ்தாபத்தையே முற்றாக நிராகரித்த விடுதலை இயக்க பிரதிநிதிகள், அரசின் பிரதிநிதிகள் இணைப்பு - Bஇன் சாராம்சம் பற்றி எடுத்துரைக்கையில் மௌனம் சாதித்தனர்.

10 ம் பக்கம் பார்க்க

# பேச்சு வார்த்தை- தமிழீழ மக்களின் நிலையும் எதிர்ப்பு ஊர்வலங்கள் பற்றியும்

காலாவதியாகிப் போன பழைய குப்பையைக் கிளறும் பாணியாக பேச்சு வார்த்தை நாடகத்தை இன்று ஸ்ரீலங்கா அரசு விடுதலை இயக்கங்களுடன் நடத்தியது. மேலும் நடாத்த முனைகிறது.

ஆனால் இவ்வரசு பேச்சு வார்த்தை நடாத்தி தமிழினப் பிரச்சனையை தீர்த்து விடுவது இதன் நோக்கமல்ல. இராணுவத் தீர்வு தான் நல்ல தீர்வு என்பதில் முழு நம்பிக்கையுடையதாகும். மேலும் இவ்வரசால் தமிழினப் பிரச்சனையை நிரந்தரமாக தீர்த்து விட முடியாது. ஏனெனில், இனவாதத்தை தூண்டிவிட்டு தமிழ் — சிங்கள இனங்களிடையே பிரிவினையை ஏற்படுத்தி தனது அரசு லாபத்தை அடைந்து வந்ததும், அடைந்து வருவதுமே உண்மையாகும்.

மேலும் ஸ்ரீலங்கா அரசுடன் சுதந்திரமடைந்த காலம் என்று சொல்லப்படும் காலந்தொட்டு தமிழ்த் தலைமைகள் நடத்திய பேச்சு வார்த்தைகள் ஏற்படுத்திய ஒப்பந்தங்கள் செயற்படாமையும் தமிழ் மக்கள் அறியாதவரல்ல.

ஒப்பந்தங்கள் வரிசையில், 1957ல் ஏற்படுத்தப்பட்ட பண்டா — செல்வா ஒப்பந்தம் பௌத்த இனவாதிகளின் பலத்த எதிர்ப்பினால் கைவிடப்பட்டது.

1965ல் ஏற்படுத்தப்பட்ட டட்லி — செல்வா ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டு விட்டது.

பல பேச்சு வார்த்தைகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் தமிழ்த் தலைமைகள் மேற்கொண்டனர். ஆனால் இவையாவும் பயனற்றுப் போய்விட்டதை யாவரும் அறிவர்.

தமிழ் இனப்பிரச்சனையை தீர்க்கும் பட்சத்தில் சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றிவிட்ட பௌத்த இனவாதிகளின் செல்வாக்கை தாங்கள் இழக்க நேரிடும் என்பதனால்; அரசு தனது நிலைப்பாட்டை தமிழ் இனம் சார்பாக எடுக்க முயலவில்லை. மாறாக, தங்களைக் காப்பாற்றிக் கொள்ள பௌத்த இனவாதிகளை வளர்க்கவே வகை செய்தது.

இனவாதத்தை வளர்ப்பதன் மூலமே தனது அரசைக் காப்பாற்றி வரும் ஸ்ரீலங்கா அரசு தமிழ் பேசும் மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க இராணுவ வன்முறையை தமிழ்ப் பகுதிகளில் கட்டவிழ்த்துவிட்டு, தமிழ் இனத்தையே அழித்துவிடுவதே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

காலத்திற்கு காலம் தூண்டிவிடப்படும் இனக்கலவரமும், அதில் திட்டமிட்டு தமிழ் பேசும் மக்களின் உடைமைகளையும், உயிர்களையும் பறிப்பதும் தெரிந்ததே. மேலும் தமிழ் பேசும் மக்களை கல்வி ரீதியில் தாழ்த்திவிட பல முயற்சிகளை எடுத்து வருவதும், அதாவது "தரப்படுத்தலை" கொண்டு வந்து தமிழ் இளைஞர்களை பல்கலைக்கழகம் செல்லவிடாமல் தடுத்தமை; வேலை வாய்ப்பில் படித்த தமிழ் இளைஞர்களுக்கு உரிய இடம் அளிக்காமை; இனக்கலவர காலத்தில் திட்டமிட்டே புத்திஜீவிகளான டாக்டர்கள், என்ஜினியர்கள், பட்டதாரிகள் மற்றும் பெரிய உத்தியோகத்தர்களை கொலை செய்தல், 1981 இனக்கலவரத்தில் யாழ்ப்பாண "பொது நூலகத்தை" அதிலும் முக்கியமான பல புத்தகங்கள் இருந்த பகுதியை கொளுத்தினர்.

இப்படியான வன்முறைச் செய்கைகள் மூலம் தமிழினத்திடையிலான புத்திஜீவிகளை அழித்து தமிழினத்தையே ஞானசூன்யம் ஆக்கிவிட முனைகின்றனர்.

அரசின் இச் செய்கைகள் புத்திஜீவிகளின் வெளியேற்றத்துக்கும், பல இளைஞர்களின் வெளியேற்றத்துக்கும் காரணமாக அமைந்தது. இவர்களின் வெளியேற்றத்துக்கு அரசாங்கம் வகை செய்து கொடுத்தது எனலாம்.

இலங்கைத் தீவிலிருந்து தமிழினத்தை அழிப்பதையோ அல்லது வெளியேற்றுவதையோ நோக்கமாகக் கொண்ட இவ் அரசினால், 1983 ஜூலையில் திட்டமிட்டு நடத்தப்பட்ட மிகப் பெரிய இனக்கலவரத்தின் பின் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் அதிவேகமாக வளர்ச்சியுற்றது.

இவ் இனக்கலவரத்தின் தாக்கம் இந்தியாவிலும் மற்ற நாடுகளிலும் எதிரொலித்தது. அதிகமாக இந்தியாவையே தாக்கியது. இந்தியாவின் தலையீட்டுக்கு வழி வகுத்தது. மனித நேயம் மதிக்கும் நாடுகளும் இந்தியாவை இப் பிரச்சனையை தீர்க்க முயலுமாறு வேண்டின.

இந்நிலையில், இந்தியாவின் முன் முயற்சியால் நடத்தப்பட்ட வட்ட மேசை மாநாடு எந்த தீர்வும் தராது பயனற்றுப் போனது. இக் காலங்களில் ஸ்ரீ லங்கா அரசு இராணுவ பலத்தை பன்மடங்காக்கியது.

ஸ்ரீ லங்கா அரசின் இந் நிலைப்பாடுகளைப் பற்றி நாம் ஆய்வு செய்யும் போது அரசு இராணுவத் தீர்வு தான் என்பதில் உறுதியாய் உள்ளதையே மேலும் மேலும் புலப்படுத்துகிறது.

இந்நிலையிலேயே தான் மீண்டும் ஒரு பேச்சு வார்த்தை நாடகம் அரங்கேறியுள்ளது.

இதில் உள்ள விசேஷம் என்னவெனில், இவ்வளவு காலமும் தமிழ் பூர்ஷுவாத் தலைமைகளுடன் நடாத்தப்பட்ட பேச்சு வார்த்தை இன்று விடுதலை இயக்கங்களுடன் நடத்தப்பட்டது.

ஸ்ரீ லங்கா அரசு தமிழ் பேசும் மக்களின் இன்றைய தலைமை விடுதலை இயக்கங்கள் என்பதை உணர்ந்தே; விடுதலை போராளிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்துவதற்கு உடன்பட்டனர்.

தமிழ் பேசும் மக்களின் தலைமையை ஏற்றிருக்கும் விடுதலை இயக்கங்கள் தமிழ் பேசும் மக்களது விடுதலையை வென்றெடுக்கும் நோக்குடன் செயல்பட்டு வருகின்றன. ஸ்ரீ லங்கா தரகு முதலாளித்துவ அரசுக்கும் தமிழ் பேசும் மக்களுக்குமிடையேயுள்ள முரண்பாடு பகை முரண்பாடு இதை பேச்சு வார்த்தை மூலம் தீர்க்க முடியாது. வெகுஜன ஆயுதப் போராட்டமே தமிழ் பேசும் மக்களது தேசிய விடுதலையை சாத்தியமாக்கும் என்பதில் விடுதலை இயக்கங்கள் முழு நம்பிக்கையை கொண்டுள்ளனர்.

எனினும் இந்திய — இலங்கை அரசுகளின் ஏற்பாட்டால் திம்புவில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் — கலந்து கொள்ளும் நிலைமை எதற்காகவென்ற கேள்விக்குறியுடன் எதிர் நோக்கிக் கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் ஈர விழிகளுக்கு தக்க பதில் சொல்ல வேண்டியது அவசியமாகின்றது.

விடுதலைக்காகப் போராடும் நாம் திம்பு பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதன் மூலம் ஸ்ரீ லங்கா அரசு தமிழ் ஈழம் தந்துவிடும் என்ற நிலைப்பாடு எமக்கு இல்லை. ஸ்ரீ லங்கா அரசால் தமிழ் ஈழம் தர முடியாது. அது நமது பிரதேசம். அதை நாம் போராடியே பெற வேண்டும்.

ஆனால் இப்பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டதன் மூலம்;

(01) தமிழ் ஈழப் போராட்டமானது சர்வதேச அந்தஸ்தை பெற்றது.

(02) விடுதலை இயக்கங்களே தமிழ் பேசும் மக்களின் தலைமைத்துவத்தை ஏற்றுள்ளன என்பதை உலகளாவிய ரீதியாக அறிமுகப்படுத்தப்பட்டது.

(03) விடுதலை இயக்கப் போராளிகளை பயங்கரவாதிகள், அமைதியை விரும்பாதவர்கள் என வர்ணித்து வந்தது ஸ்ரீ லங்கா அரசு. இதில் நாம் பங்கு பற்றியதன் மூலம் நாங்கள் அமைதியை விரும்புகிறவர்கள் என்பதை நிரூபித்துள்ளோம்.

(04) தமிழீழம் தவிர்த்த எத்தீர்வும் இந்த அரசின் அமைப்பில் சாத்தியமில்லையெனவும், தமிழீழந்தான் எமது இறுதியும், அறுதியுமான தீர்வு என்பதை மீண்டும் வலியுறுத்தல் எனும் முக்கிய கருமங்களைச் சாதிப்பதற்காகவே.

இனி, பேச்சு வார்த்தைக்கெதிராக கொதித்தெழுந்த மக்களின் எண்ணங்களையும், அவர்களின் ஊர்வலங்களில் எழுந்த கருத்துக்களையும் பற்றிச் சந்திப்போம்.

கடந்த கால சம்பவங்களின் பின்னணியை தீர்க்கமாகப் புரிந்து கொண்டிருந்த மக்கள் "இது ஒரு பயனற்ற பேச்சு வார்த்தை" எனவே கருத்துக் கொண்டிருக்கின்றனர். ஊர்வலங்களில் எழுப்பப்பட்ட கோஷங்களிலும் இதையே அறியக் கூடியதாயிருந்தது.

மேலும், இடைக்கால மக்கள் ஓய்வு தேவைதானா? என்று கருத்துக்கள் எழுந்த போது...

இத்தகைய ஓய்வுகள் போராட்டத்தினின்று மக்கள் முற்றாகவே விடுபடும் நிலையை கொணரும் என்ற கருத்துக்கள் எழுந்தன. வெளிநாட்டுப் பயணம் போன்ற இளைஞர், யுவதிகள் வெளியேற்றமும், அதற்கான அரசின் ஒத்துழைப்பும் இதற்கு சான்றாகும் என எடுத்துரைத்தனர்.

யுத்த நிறுத்தம் — ஒரு போராட்ட மழுங்கடிப்பு என்ற சிந்தனையாளர்களினது அணி வகுப்பும் ஊர்வலங்கள் தென்பட்டது.

போர் நிறுத்தத்தின் பின்பும் சிறிலங்கா அரச படைகள் வன்முறைகள் ஓயவில்லை. தொடர்ந்து ஆங்காங்கே நிகழ்த்திக் கொண்டு தான் இருந்தது.

போர் நிறுத்தத்தின் பின்பும் சிறிலங்கா அரச படைகள் வன்முறைகள் ஓயவில்லை. தொடர்ந்து ஆங்காங்கே நிகழ்த்திக் கொண்டு தான் இருந்தது.

பூநகரி, கொக்கிளாய், வவுனியாவில் நடந்த சூட்டுச் சம்பவங்கள், கற்பழிப்புக்கள், திருகோணமலைச் சம்பவங்கள் இப்படிப் பல.

இச் சம்பவங்களினால் 'போர் நிறுத்தம் போலியானது' என்பதையே சிறிலங்கா அரசு தமிழ் பேசும் மக்களுக்கு உணர்த்தியுள்ளமையைக் காட்டுகின்றது.

மேலும், இப் போர் நிறுத்த காலங்களில் சிறிலங்கா அரசு நவீன ஆயுதங்களை வாங்கி தனது இராணுவத்தை பலப்படுத்திக் கொண்டதும், உளவு வேலைகளில் அதிகமாக ஈடுபட்டிருப்பதும், இப் போர் நிறுத்தத்தையும், பேச்சு வார்த்தை

10-ம் பக்கம் பார்க்க



# இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுச் சித்திரம்.

இன்றைய நெருக்கடியான காலகட்டம் விடுதலைப் போராட்ட வரலாறுகளில் ஏற்படுவது சகஜமே. நெருக்கடியின் கடுமையான தன்மையைக் கண்டு திகைத்து நிற்பதாலே, ஒதுங்கி போவதாலே எமது விடுதலையை வென்றெடுக்க முடியாது. ஏற்படும் ஒவ்வொரு பிரச்சனைகளுக்கும் முகங்கொடுத்து, அந்நிலைமைகளைப் பற்றிய தீர்க்கமான ஆய்வை மேற்கொண்டு எமது எதிர்காலத்தின் போக்கை நிர்ணயிப்பது அவசியமாகின்றது.

எமது ஆய்வுகள் குறுகிய நோக்கத்திலேயே இருந்தால், எமக்கு பாரதூரமான விளைவுகளையே ஏற்படுத்தும். ஆகவே, நாம் ஆய்வுகளை மேற் கொள்ளும் போது, கடந்த கால சம்பவங்கள் பற்றியும், நிகழ் கால சம்பவங்கள் பற்றியும் திட்டமான ஆய்வு மேற்கொள்ளும் பட்சத்திலே எமது எதிர்கால வேலைத் திட்டங்களுக்கான ஆய்வுகளை தீர்க்கமாக சிந்தித்து செயலாற்ற முடியும்.

இன்று தமிழீழத்தில் ஆயுதமேந்திப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலை இயக்கங்கள் பேச்சு வார்த்தை எனும் சகதிக்குள் புகுந்துள்ளன. இற்றைக் கால அரசியல் வரலாற்றில் பேச்சு வார்த்தை சம்பவங்கள் எமக்கு புதிதா? எவ்வளவு தரம் பேச்சு வார்த்தை! எத்தனை எதிர்ப்பு ஊர்வலங்கள், சத்தியாக் கிரகங்கள்.

தனது அரசை நிலை நிறுத்துவதற்கான கருவியாக இனவாதத்தைக் கெட்டியாகப் பிடித்திருந்த அரசியல் கட்சிகளின் பசப்பு வார்த்தைகள் என்ன நாம் அறியாததா? இல்லை. நிகழ்த்தப்பட்ட சம்பவங்கள் என்ன நாம் மறந்து விட்டோமா?

"இறந்த கால சம்பவங்கள் நிகழ்காலத்திலும் தொடர்வதால், நிகழ்கால சம்பவங்கள் எதிர்காலத்திலும் தொடராதென்பதற்கு என்ன அத்தாட்சி?"

ஆகவே, நிகழ்கால சம்பவங்கள் எதிர்காலத்திலும் தொடராமலிருக்க வேண்டுமெனின், அது எமது கைகளிலேயே தங்கியுள்ளது.

இந்நிலையில் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் பாதையில் ஏற்படும் தடைகளை களைவதற்காக, எம்து கடந்த கால அனுபவங்களையும், நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருக்கும் அரசியல் சூழ்நிலையை ஆய்வு செய்வதாக வேண்டியுள்ளது.

எனவே, இலங்கை சுதந்திரம் அடைந்த காலந்தொட்டு நிகழ்ந்த சம்பவங்களின் தன்மைகளை ஆராய்வதுடன், எதிர்காலம் பற்றிய சிந்தனையையும் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### 1. சுதந்திரமடைந்த காலத்தில்

1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி இலங்கை பிரிட்டிஷ் அரசின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டது. அதாவது, சுதந்திரம் அடைந்தது. இங்கு, சுதந்திரம் எனும் பதம் பிரயோகிப்பதே கேலிக்குரிய விடயமாகும். ஏனெனில் இலங்கை சுதந்திரமடைந்தது என்ற பெயரேமொழிய, இலங்கை மக்கள் அச்சுதந்திரத்தை அனுபவித்தார்களா என்பது கேள்விக் குறியே.

இங்கு "அரசு கை மாற்றப் பட்டது" எனக் குறிக்கும் பதமே தகுந்ததாகும். ஏனெனில், ஆளும் வர்க்கம் மாற்றப்படவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியின் போது நிகழ்ந்த ஒடுக்கு முறைகளில் சிறிதளவு கூட மாற்றம் இல்லை என்பதே உண்மையாகும்.

கை மாற்றப்பட்ட அரசின் முதல் பிரதம மந்திரியாக டி.எஸ். சேனநாயக்கா வந்தார். அதாவது 1946ல் அமைக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிப் பீடத்தை அமைத்தது. இவ்வரசின் முதன் முதல் கைங்கரியம் மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமையைப் பறித்ததே.

அன்று, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்திருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் மந்திரிப் பதவி மோகத்தில் மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட்ட போது கண்ணை மூடிக் கொண்டிருந்து விட்டார். இதனால், இவர் தனது பூர்ஷ்வா வர்க்க சிந்தனையை வெளிப்படையாக இனங் காட்டிக் கொண்டார்.

ஆனால், இவர் டொனமூர் அரசியற் திட்டக் காலத்தில் இலங்கைத் தமிழினப் பிரச்சனைக்குரிய தீர்வாக சமஷ்டி (50:50) கோரிக்கையை முன் வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது வர்க்க நலன் பேணும் செயல் 50:50 கோரிக்கை தோல்வியுற்றதும், அதற்கான போராட்டங்களில் ஈடுபடத் தூண்டவில்லை. மாறாக, சிங்கள நிலப்பிரபுத்துவ அரசுடன் இணைந்து மந்திரிப் பதவியை நாடுவதிலே குறியாக அமைத்து அதனைப் பெற்றுக் கொண்டார்.

### 2. தமிழரசுக் கட்சி, எஸ்.எல்.எஃப்.பி. கட்சி உதயம்

ஜி.ஜி. பொன்னம்பலத்தின் காங்கிரஸ் கட்சியில் அங் காங்கிரஸ் கட்சியில் அங்கத்துவம் வகித்து கொண்டிருந்த எஸ்.ஜே.வீ. செல்வநாயகம் மலையக மக்களின் பிரச்சனையில் காங்கிரஸ் கட்சி மெத்தனமாக இருந்து விட்டதாக குற்றஞ்சாட்டி கட்சியிலிருந்து விலகி 1949ல் தமிழரசுக் கட்சியை நிறுவினார்.

ஆனால், இக் கட்சியை அமைத்தவர், காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகியதற்காக மலையக மக்களின் பிரச்சனையை காரணங் காட்டினாரே தவிர மலையக மக்களின் மேல் அரசு தொடுத்த ஒடுக்கு முறை செயல்களுக்கெதிராக கண்டன ஊர்வலங்களோ, கண்டனப் போராட்டங்களோ எதுவுமே நடந்தவில்லை.

ஆனாலும், மிகக் குறுகிய காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியுற்று வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஆக்கிரமித்துக் கொண்டது இக் கட்சி.

### 3. ஒரு மொழிக் கொள்கை (சிங்களம்) முன் வைத்தல்

இக் காலத்தில் U.N.P. முழு முதலாளித்துவக் கட்சி எனவும், தனது கட்சி சோசலிசக் கட்சி எனவும் தம்பட்டமடித்தார்.

மேலும் U.N.P. கட்சி தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் தேசிய மொழியாக்காது காலங் கடத்தி வருவதாகக் குறிப்பிட்டு, தனது கட்சியின் முதல் வேலைத் திட்டம் தமிழ் — சிங்கள மொழிகளை ஆட்சி மொழிகளாக்குவதே எனக் குறிப்பிட்டார்.

இக் காலங்களில் இடதுசாரிக் கட்சிகளின் வளர்ச்சி துரிதமடைந்ததுடன் பல பிளவுகளும் ஏற்பட்டது.

1952ல் டி.எஸ். சேனநாயக்கா மரணமடைய டட்லி சேனநாயக்க முதல் மந்திரிப் பதவி ஏற்றார். இவரின் காலத்தில் உலகச் சந்தையில் பொருட்களின் விலையேற்றம் கூடியதன் காரணத்தால் இலங்கையின் பொருளாதாரத்தையும் பாதித்தது. முக்கியமாக அரிசியின் விலை கூட்டப்பட்டது.

இந்நிலையில், இடதுசாரிகள் தங்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர்.

இந் நிலைமையை சமாளிக்க முடியாது, நிலை தடுமாறிவிட்ட டட்லி சேனநாயக்கா தன் பதவியை இராஜினாமா செய்தார். இதன் பின் சேர். ஜோன் கொத்தலாவெல பதவிக்கு வந்தார்.

இக்காலத்தில், தமிழ் — சிங்களம் ஆகிய இருமொழிக் கொள்கையை ஐ.தே.க (U.N.P.) கட்சி கொண்டிருந்தது. இக் கட்சியிலிருந்து இரு மொழிக் கொள்கையை அமுல் படுத்தாமல் காலந் தாழ்த்துவதாக குற்றஞ்சாட்டி வெளியேறிய S.W.R.D. பண்டார நாயக்க 1951ல் ஸ்தாபித்த S.L.F.P.யும் இரு மொழிக் கொள்கையையே கொண்டிருந்தது. ஆனால், அநாகரிக தர்மபால போன்றோரினால் வளர்க்கப்பட்ட இனவாதம் பௌத்தவாதிகளிடம் விசுவரூபமெடுத்ததால், S.W.R.D. பண்டார நாயக்க தனது கொள்கையை மாற்றிக் கொண்டார்.

அத்துடன் ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்ற அவரின் ஒரே நோக்கம் காரணமாக, தனது செயற்பாடுகளை திட்டமிட்டு சிங்கள மக்கள் மத்தியில் சென்றார்,

அன்று, U.N.P. அரசானது முதலாளிகளையும், குட்டி முதலாளிகளையும், நிலப் பிரபுக்களையுமே பிரதிநிதித்துவப் படுத்தியிருந்தது. இந்நிலையினால் S.W.R.D. பண்டாரநாயக்க மக்களிடையே மதவாதத்துக்கு முக்கியத்துவம் அளித்து மதவாதிகளை (குருமார்) தன் பக்கம் இழுத்துக் கொண்டு கிராமப்புற மக்களை, மதவாதிகளின் துணையுடன் வென்றெடுத்தார். சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி, அதுவே தனது கொள்கை எனப் பிரகடனப் படுத்தினார்.

இலங்கை பௌத்த காங்கிரஸினால் 1954ல் U.N.P. ஆட்சி பௌத்த விரோத ஆட்சி என வர்ணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிலையின் தாக்கம் U.N.P. கட்சிக்குள் முரண்பாடுகளை ஏற்படுத்த U.N.P.யும் தனது இரு மொழிக் கொள்கையை விட்டு ஒரு மொழிக் கொள்கைக்குத் தாவியது.

ஆனால், சேர். ஜோன். கொத்தலாவ யாழ் நகர் விஜயம் செய்திருந்த போது, கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடந்த கூட்டத்தில் சிங்கள — தமிழ் ஆகிய இரு மொழி ஆட்சியை நிலை நிறுத்துவோம் என உறுதியளித்தார். ஆனால், யாழ் நகர் விஜயம் முடிந்ததும் ஆடையை மாற்றுவது போல் கொள்கையையும் மாற்றிக் கொண்டார்.

இதொன்றும் பெரிய ஆச்சரியமில்லை. நிலப் பிரபுத்துவ, பூர்ஷ்வாவர்க்க ஆட்சியாளர்கள் தங்கள் சுயநலமும், வர்க்க நலமும் பேணுவதற்காக மனிதாபிமானமற்ற முறையில் சொல்லொன்று; செயலொன்று என்ற முறையில் செயற்படுவது அவர்களுக்குரிய பண்பே.

1956ம் ஆண்டில் தேர்தல் வந்தது. S.L.F.P.யும், U.N.P.யும் ஒரு மொழிக் கொள்கை (சிங்கள மொழி மட்டும்)யை முன்வைத்தனர். ஆனால், கிராமிய மட்டத்திலும், பௌத்தவாதிகள் மத்தியிலும் பலத்த ஆதரவைப் பெற்றிருந்த S.L.F.P. ஆட்சிக்கு வந்தது. இத் தேர்தலில் S.L.F.P.யுடன் கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி என்பன போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் மேற்கொண்டமை இவ் இடதுசாரிகளின் பாராளுமன்ற முறை நம்பிக்கையையும், பதவி வெறி பிடித்த நிலையையும், பிற் போக்கு தனத்தையும், இனவாதத்திற்கு துணை போகும் தன்மையையும் தெள்ளத் தெளிவுடன் எடுத்தியம்பி விட்டது.

இந் நாள் வரை அரசியலிலிருந்து ஒதுக்கப் பட்டிருந்த பௌத்தமத வாதிகளின் ஆதிக்கம் S.W.R.D. பண்டார நாயக்கவின் ஆட்சியில் மோலோங்கியது. இந் நிலைமை இனவாதத்தின் வளர்ச்சிக்கு தூண்டுகோலாய் அமைந்தது.

### 4. தனிச் சிங்கள சட்டமும் தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகமும்

ஆட்சியைக் கைப்பற்றிய S.W.R.D. பண்டாரநாயக்க (S.L.F.P.) தனிச் சிங்கள சட்டம் (1956ல்) கொண்டு வந்தார். அன்று, அதாவது 1956 தேர்தலில் S.J.V. செல்வா தலைமையில் அமைந்த தமிழரசுக் கட்சி காங்கிரஸ் கட்சியை எதிர்த்து தமிழ்ப் பகுதிகளில் அதிக வாக்குகளைப் பெற்று பல இடங்களைக் கைப்பற்றியது.

இயங்கியல் வளர்ச்சியை மறுக்க முடியாது. காலத்துக்குக் காலம் பிரச்சனைகளினூடும், முரண்பாடுகளினூடும் வளர்ச்சியுற்றுக் கொண்டிருக்கும் சமூகம், விழிப்புற்று பழைய தலைமைகளின் பிற்போக்குத் தனத்தை உணர்ந்து, அவைகளை நிராகரிப்பதும், புதிய தலைமைகளை வரவேற்பதும் உண்டே.

பிற்போக்குக் கட்சியாக விளங்கிய காங்கிரஸ் கட்சியில் தமிழ் பேசும் மக்களுக்கிருந்த அவநம்பிக்கையையும், மக்களின் விழிப்புத் தன்மையையும் புரிந்து கொண்டு காங்கிரஸ் கட்சிலிருந்து உதிர்ந்த தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசிய வாதத்தை முன் வைத்து, புதிய அணுகு முறையைக் கையாண்டதே அக் கட்சியின் வெற்றிக்குக் காரணமாகும் எனலாம்.

மொத்தத்தில் இரு கட்சிகளும் (காங்கிரஸ் — தமிழரசு) ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

ஆனால், 'G.G.'ன் மேலிருந்த நம்பிக்கையின்மை, 'செல்வா' 'G.G.'யை எதிர்த்துச் சாடியதால், மக்களின் நம்பிக்கை 'செல்வா'வில் விழுந்தது. அக்கால அரசியல் சூழ்நிலையின் தாக்கமே காரணம் எனலாம்.

(தொடரும்)

# 1983 யூலை இனக்கலவரம் இக்கை



இனவெறி பிடித்த சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசினால் தூண்டப்பட்டு, நடத்தி முடிக்கப்பட்ட 1983 யூலை இனக் கலவரத்தின் 2ம் ஆண்டு நினைவை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப் படுகின்றது.

இந்நாட்களில் யூலை 25, 27—ம் திகதிகளில் வெலிக்கடை வெஞ்சிறையில் நிகழ்த்தப்பட்ட படுகொலைகளில் உயிர் நீத்த தமிழீழத் தேசபிதா தங்கத்துரை, தளபதி குட்டிமணி, ரெலோவின் முன்னணிப் போராளிகளான ஜெகன், நடேசு தாசன், தேவன், சிறிகுமார், சிவபாதம் உட்பட 53 விடுதலைப் போராளிகளுக்கும் வீர அஞ்சலியை செலுத்துகிறோம்.

மற்றும் இந்நாட்களில், இலங்கை முழுவதும் நடந்த வன்செயலில் உயிர் இழந்த எம் மக்களுக்கும் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம்.

சர்வதேச ரீதியாக கூர்மை யடைந்துள்ள காலனி, நவ காலனி யாதிக்க, தேசிய விடுதலைப் போராட்டங்களில் தமிழீழப் போராட்டமும் ஒன்றாகும்.

தொடர்ச்சியாக, இனக் கலவரங்களை ஏற்படுத்தி தமிழ் பேசும் மக்களை படுகொலை செய்து, இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாக மாற்றுவதே இவ் இனவெறி அரசின் நோக்கமாகும்.

இனவெறி அரசின் ஒடுக்குமுறை செயற்பாடுகள் தமிழ் பேசும் மக்கள் மேல் வலுவாகப் பிரயோகப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையிலும் தமிழ்ப் பூர்ஷ்வாத் தலைமைகள் தங்கள் சுயநலமும் வர்க்க நலமுமே பேணிக் கொண்டிருந்தனர். ஒடுக்குமுறைக்கு எதிராக, முறையாக ஒழுங்கான ஒரு போராட்டத்தை முன் வைக்கத் தவறினர். அவர்கள் மேற்கொண்ட அமைதி வழிப் போராட்ட முறைகளும் பயனற்றுப் போயின.

இக்காலத்தில் தான், தமிழ் பேசும் மக்களின் தலைமைகளாக இருந்த பூர்ஷ்வா அரசியல்வாதிகளின் சுயநலம் காக்கும் தன்மையை புரிந்து அமைதி வழிப் போராட்ட முறைகளையும் நிராகரித்து, இலட்சிய உறுதியோடு, முற்போக்கான சிந்தனையுடன் கூடிய புதிய போராட்ட வழிமுறையை மக்கள் முன் வைத்தார் தமிழீழ சேதபிதா தங்கத்துரை.

தமிழ் பேசும் மக்களின் முழுமையான விடுதலையை கருத்திற்கொண்டு, புதிய போராட்ட முறையை நித
சனமாக்க, ஸ்தாபனம் ஒ
றின் அவசியத்தை உணர்ந்து
அதற்கான செயற்பாடுகளி
தன்னை முழுமையாக ஈ
படுத்தியவர். அவரின் அரு
பணியில் உருவானதே இன்
புரட்சிகர மக்கள் ஆயுத
போராட்டத்தை நெறி
படுத்திக் கொண்டு செல்லு
இயக்கமான தமிழீழ வி
தலை இயக்கமாகும்.

துரோகிகளின் சதியி
விளைவால் கைது செய்ய
பட்ட தமிழீழ தேசபிதாவு
தளபதி குட்டிமணியும் தே
பிதாவுடன் இணை பிரியா
இருந்து அதாவது, மெய்
காப்பாளனாக பல சந்தர்
பங்களில் அரச பொலி
அராஜக வாதிகளின் கை
களில் இருந்து தப்புவதற்
துணைநின்ற முன்னணி
போராளி தேவன் ஆகியே
ரும், இவர்களைத் தொடர்ந்
கைது செய்யப்பட்ட மு
னணிப் போராளிகளா
ஜெகன், நடேசதாசன், சி
குமார், சிவபாதம் மாஸ்ட
ஆகியோரும், சித்திரவ
முகாம்களுக்கு இழுத்துச் செ
லப்பட்டு, சொல்லொண
சித்திர வதைக்குள்ளாக்க
பட்டு, ஒப்புதல் வாக்குமூல
எடுக்கப்பட்டு பயங்க



நாம் தமிழீழம் பெறுவது நிதர்சனமான உண்மை: அதை எச்சக்தியாலும் நிரந்தரமாகத் தடுத்து நிறுத்திவிட முடியாது.

—தமிழீழ தேசபிதா தங்கத்துரை

# படிந்த நாட்களை நினைவு கூர்வோம்.

வாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தால் விசாரிக்கப்பட்டு தளபதி குட்டிமணி, ஜெகன் இருவருக்கும், மரண தண்டனையும் தேசபிதாவுக்கும் மற்றையோருக்கும் ஆயுட்கால சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டது.

இப்பாஸிஸ நீதிமன்றில் தமிழீழ தேசபிதா வரலாற்றுச் சிறப்புமிக்க உரையை நிகழ்த்தி, தமிழீழப் போராட்டத்தின் ஆரம்பம் பற்றியும் போராட்ட வழிமுறை பற்றியும் சிறிலங்கா அரச இன ஒடுக்கு முறையாளர்களின் துரோகத்தையும் அம்பலப் படுத்தினார். இதுகாறும் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் நிலையை புரிந்து கொள்ளாதிருந்த உலக நாடுகளுக்கு இவ்வுரையின் மூலம் தெளிவாக்கியதுடன் தான் ஸ்தாபித்த தமிழீழ விடுதலை இயக்கத்தின் கொள்கையையும் தெளிவாக்கினார்.

தேசபிதாவும், மற்றையோரும் நவபாஸிஸ நீதி மன்றத்தால் தண்டனை அளிக்கப்பட்டு வெலிக்கடை சிறையில் கொடுஞ்சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த வேளை 1983 யூலை இந் நாடெங்கும் நடந்த இனக் கலவரத்தில் இனவெறியர்களால் 25ம் திகதி தேசபிதா, தளபதி குட்டிமணியும் ரெலோ முன்னணிப் போராளிகளும் மற்றும் விடுதலைப் போராளிகளும் கொலை செய்யப்பட்டனர். தொடர்ந்து 27ம் திகதியில் நடந்த வெறியாட்டத்தில் மற்றும் போராளிகளும் கொலை செய்யப்பட்டனர்.

மொத்தம் 53 விடுதலைப் போராளிகள் வெலிக்கடைச் சிறையில் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்படுகொலை நிகழ்வுகள் உலகையே உலுக்கி விட்டது. அரச பாதுகாப்பு உள்ள சிறையில் நடந்த இந் நிகழ்ச்சி சிறிலங்கா அரசின் இனவெறித் தன்மையை அப்பட்டமாக உலகுக்கு எடுத்துரைத்தது.

அன்று நாடெங்கும் நடந்த இனக்கலவரத்தில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். தென்னிலங்கையின் பல பகுதிகளில் உள்ள அனைத்து தமிழ் மக்களும் உடமைகள் இழந்து அகதிகளாக்கப்பட்டு, அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர்.

இந்நிலைமைகள், தமிழ் ஈழப் போராட்டத்தின் புதிய பரிணாமத்துக்கு வழி வகுத்தது

இக்காலத்தில் தேசபிதாவின் தலைமையில் இருந்த எமது இயக்கமான 'தமிழ் ஈழ விடுதலை இயக்கம்' தேசபிதாவின் மறைவினால் அதாவது, இப்பேரிழப்பினால் தளர்ச்சியுற விடாது, தொடர்ந்து தேசபிதாவின் பாசறையில், அவரின் கருத்துக்களிலேயே ஊறி வளர்ந்த சிறிசபாரெத்தினம் அவர்கள் தலைமைப் பொறுப்பேற்று, இயக்கத்தை புரட்சிக் கரப் பாதையில் நடத்தி வருகிறார்.

தேசபிதாவின் கருத்துக்களிலும், தலைவர் சிறிசபாரெத்தினம் அவர்களின் வழி நடத்தலிலும், திறம்பட இயங்கிவரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினரின் இராணுவ நடவடிக்கைகள் சிறிலங்கா அரசை நிலை குலைய வைத்துள்ளது.

அதாவது, சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலும், கிளிநொச்சி முருங்கன் ரெயில் தகர்ப்பும், கொக்காவில் இராணுவ முகாம் தாக்குதலும் இப்படியான பெரிய தாக்குதல்களும் இத்தாக்குதல்களின் பின் மக்களுக்கு எந்த சேதத்தையும் அரச இராணுவம் செய்யாதவாறு காத்தமையும், அரசுக்கு கிலியைக் கொடுத்துள்ளதுடன், தமிழ் ஈழ மக்களின் எண்ணங்களில், சிந்தனைகளில் (ரெலோ) தமிழ் ஈழ விடுதலை இயக்கம் நிறுத்தப் பெற்று அதிவேகமாக வளர்ந்து வருகின்றது.

தொடர்ந்தேர்ச்சியான மக்கள் ஆயுதப் போராட்டத்தினை மேற்கொள்ள தீர்க்கமாக புறநிலைக்காரணிகளை ஆராய்ந்து திறமையாகத் தனது செயற்திட்டங்களை நடைமுறைப் படுத்திக் கொண்டு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சுதந்திர சோசலிசத் தமிழ் ஈழம் என்ற அதன் இலக்கை அடையும் வரை எந்நிலையிலும் பின் நிற்காது. தமிழ் ஈழம் பெறும் வரையில் ஓயாது போராட்டமே.





என்னைத் தூக்கிலிடுவதன் மூலம் பல்லாயிரக் கணக்கான குட்டிமணிகள் உருவாகுவார்கள். அவர்கள் தமிழ் ஈழத்தின் இறைமையை மீட்டெடுக்கக் கூடிய தீரம்மிக்க வீரர்களாக இருப்பார்கள்.

—தளபதி குட்டிமணி

# திம்பு 2ம் கட்ட பேச்சுவார்த்தையில், ரேலோ பிரதிநிதி சத்தியேந்திரா!!

*(ஆவணி 14, 1985 அன்று திம்பு பேச்சு வார்த்தையில் தமிழீழ விடுதலை இயக்க சார்பாக சிரேஷ்ட சட்டத் தரணி சத்தியேந்திரா ஆற்றிய உரையின் சாராம்சம்.)*

இங்கு நடைபெறும் பேச்சு வார்த்தையானது தமிழ் தேசிய இனப் பிரச்சனையின் சர்வ தேச பரிமாணத்தின் வெளிப்பாடாகும். இதனைக் கருத்திற் கொண்டு தமிழர்களாகிய நாங்கள் இந்த பேச்சு வார்த்தையை ஏற்பாடு செய்ததில் இந்திய அரசின் பங்கினை ஏற்று அதனை வரவேற்கிறோம்.

நாங்கள் அடிக்கடி கூறுவோம் நாம் தமிழர்கள் மட்டுமல்ல இந்தியரும் தான் என்று. அதே வேளை இனி வரவிருக்கும் வருடங்களில் சிங்கள சகோதரர்கள் கூட இந்திய துணைக் கண்டத்தின் சகோதரர்களுடன் வாழ வேண்டிய தேவையை உணரத் தொடங்குவார்கள் என்றும் நாம் உறுதியாக நம்புகிறோம்.

மீண்டும், இங்கு நடைபெறும் பேச்சுவார்த்தையானது வாதத் திறமைக்கான பயிற்சி அல்ல. இது அவ்வாறிருப்பின் முன்னர் திரு.ஜீ.ஜீ பொன்னம்பலம் தனது இலாவகமான பேச்சுக்களை பேசிய போதே தமிழர்கள் தமது உரிமைகளைப் பெற்றிருப்பர். இது நியாயம் எதுவென்பதைக் கண்டறிவதற்கான ஒரு முயற்சியாகும். ஓர் நியாயமானதும் நீடிக்கக் கூடியதுமான தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்று கூறி பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் இந்த பேச்சு வார்த்தைக்கான ஏற்பாடுகளை மிகவும் சரியான முறையில் செய்துள்ளார். இங்கு நீடிக்கக் கூடிய தீர்வு என்பது ஒரு வருடத்திற்கு, இரு வருடத்திற்கு அல்ல. வரவிருக்கும் சந்ததிகளிற்கும் நீடிக்கக் கூடியது. இந்த அடிப்படையில்தான் தமிழர் பிரதிநிதிகளாகிய நாங்கள் இந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொள்கிறோம்.

வேறு யாரிற்காகவோ ஒரு சந்தர்ப்பவாத ஒப்பந்தத்தை செய்ய வரவில்லை. இதே அடிப்படையில் தான் சிறிலங்கா அரசும் வந்திருக்கும் என நாம் நம்புகின்றோம்.

இங்கு நியாயத்திற்கு முதலிடம் கொடுக்க வேண்டிய தேவை உள்ளது. வெறும் சொற்களோ, வெற்றுக் காகிதங்களில் எழுதப்பட்டவையோ போதியதல்ல. இரு தரப்பு பிரதிநிதிகளாகிய எங்களை இங்கே கொண்டு வந்துள்ளது எது என்பது பற்றிய உண்மைகளை பார்க்க வேண்டியவர்களாக உள்ளோம். முதலில் சில காலங்களிற்கு முன்னர் கொழும்பு உயர் நீதி மன்றம் ஒன்றில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கத்துரை அவர்கள் வெலிக்கடைச் சிறையில் அரச பாதுகாப்பில் இருந்தபோது படுகொலை செய்யப்படுவதற்கு சில மாதங்களிற்கு முன்பாக வழக்கு விசாரணையின் போது ஆற்றிய உரையிலிருந்து சிலவற்றை கூற விரும்புகிறேன். இங்கு நடந்ததையிட்டு சிறிலங்கா அரசு வெட்கப்பட வேண்டும் என்பதுடன் அதிலிருந்து நாம் சில பாடங்களைப் படித்துக் கொள்ள வேண்டும் எனவும் நினைக்கிறேன். இவை ஒன்றும் நடக்கவில்லை என மறுத்துவிட முடியாது. படுகொலை செய்யப்படுவதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் நடராஜா தங்கவேல் கூறினார்:

"நாம் வன்முறை மீது காதல் கொண்டவர்களோ அன்றி அது போன்ற நோய்களால் பாதிப்புற்ற மன நோயாளிகளோ அல்லர். மாறாக விடுதலையை முன்வைத்துப் போராடும் ஒரு ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாங்கள். பயங்கரவாதம், பயங்கரவாதம் என ஓலமிடும் பெருந்தகையாளர் கட்சிக்கு ஒன்று கூறிக் கொள்வேன். உங்களினால் கிளப்பி விடப்பட்ட இனத் துவேசத்தீயினாலும் ஆயுதக் கடையரினாலும் நூற்றுக் கணக்கான தமிழர் உயிர்கள் இழந்த போதும், தமிழ் பெண்கள் கற்பு அவர்கள் குடும்பத்தினர் முன்னிலையிலேயே பறிக்கப்பட்ட போதும், அவர்களின் நூற்றுக் கணக்கான கோடி ரூபாய் சொத்துக்கள் சூறையாடப்பட்ட போதும் அவை உங்கட்கு பயங்கரவாதம் என தோன்றவில்லையா? பச்சைக் கொலையாக 1977ம் ஆண்டில் மட்டும் உயிர் இழந்தவர்களே 400 இற்கு மேற்பட்ட தமிழர்கள். அவர்களின் குருதி பாய்ந்து ஓடியதால் இத்தீவின் மேல் கவிந்திருந்த வானமே செக்கல் மயமானது. அவையெல்லாம் உங்களிற்கு பயங்கரவாதம் என்று தோன்றவில்லையா? 40 வருடங்களாக இதற்காக நீங்கள் என்ன செய்தீர்கள்? இத்தீவில் வனவிலங்குகளிற்கேனும் ஓர் வரையறுக்கப்பட்ட பிரதேசம் உண்டு. ஆனால் தமிழன் தமிழனாக வாழ்வதற்கு பாதுகாக்கப்பட்ட வரையறையுள்ள பிரதேசம் எதுவும் உங்களினால் இதுவரை வழங்கப்படவில்லை."

ஆகவே, இன்று நாம் உண்மையாக பேசிக் கொண்டிருப்பது இலங்கைத் தமிழர்கள் தன்மானத்துடன் வாழ்வதற்கு ஓர் புகலிடம் பற்றியே.

சுதந்திரம் மக்களின் பிறப்புரிமை. வன்முறையினால் உயிர் தாக்கப்படும் போது, உயிர் வாழ்வதற்கான சகல வழிகளும் அடக்கப்படும் போது தற்பாதுகாப்பிற்காக எடுக்கப்படும் உபாயங்கள் உரிமையாக மாறுவதோடு அது நியாயப்படுத்தவும் படும். இவ் வன்முறையின் தன்மை தான் அதை எதிர்க்கும் சக்தியின் தன்மையை தீர்மானிக்கிறது. நாம் இங்கு கூடியிருப்பது இதனை நியாயப்படுத்தும் ஒரு செயல் முறையாகும். இங்குள்ள சிறிலங்கா அரச பிரதிநிதி தீர்ப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி பேசுவதில் ஈடுபட்டு இங்கு எடுக்கப்படும் முடிவுகளை பின்னர் அரசியல் அமைப்பு முறைகள் மூலம் அமுல்படுத்த முனைகிறார்கள் என்பது நாங்கள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறோம் என்பதனை சிறிலங்கா அரசு அங்கீகரிக்கிறது என்பதனையும் உள்ளடக்கியுள்ளது. நாம் தமிழ் மக்களைப் பிரதி நிதித்துவப் படுத்தவில்லையென்றால் இப் பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வதைப் பற்றி கடுமையாக மீளாய்வு செய்ய வேண்டிவரும். ஏனென்றால் நாம் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறோம் என்ற அடிப்படையில் தான் நாம் இந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொண்டுள்ளோம்.

நாங்கள் ஆரம்பத்தில் இந்த பேச்சு வார்த்தைக்கான அடிப்படைத் திட்டத்தை எடுத்துக் கூறியுள்ளோம். இத்திட்டம் பயனுள்ள கருத்துப் பரிமாறலிற்கு வழி வகுக்கும் என நாம் கருதுகிறோம். இங்கு நடைபெறும் பேச்சு வார்த்தை ஒரு பயனுள்ள கருத்துப் பரிமாறலிற்கு வழி வகுக்குமாயிருந்தால் அதன் மூலமே ஒரு திடமான அடிப்படையை உருவாக்கவும் நாம் இங்கு என்ன பேசுகிறோம் என்பதை தெளிவுபடுத்தவும் முடியும். நாம் இங்கு பேசுவனவற்றின் உண்மைகளை சரியாக இல்லாவிடினும் பரந்தளவிலாவது விளங்கிக் கொள்ளாவிட்டால் எம்மால் அடுத்த கட்டமான விரிவான ஆராய்ச்சிக்குப் போக முடியாது. ஆகவே எம்மால் முன் வைக்கப்படும் பரந்த விவகாரங்களை விளங்கிக் கொள்ள வேண்டியுள்ளது.

முதலாவதாக தேசிய இனம் என்பது கூட வாழக் கூடிய ஒரு கூட்டம். மக்களை இனம் காட்டுவதாகும். இது வெறும் அறிவு ரீதியான கோட்பாடல்ல. இது மனிதனின் மனவெழுச்சியை ஆழமாகத் தொடுகின்றது.

எமது ஆயிரமாயிரம் இளைஞர்களை உயிர்த் தியாகத்திற்கு முன்வர வழிகாட்டிய இம்மன வெழுச்சியை விளங்கிக் கொண்டாலன்றி தேசிய இனமென்றால் என்ன என்பது பற்றி விளங்கிக் கொள்ள முடியாது. இன்று இலங்கைத் தமிழர்கள் ஓர் தேசிய இனமாக உள்ளார்கள் என்ற உண்மையை அங்கீகரிக்கும் பட்சத்திலேயே நாம் இங்கு இந்த பேச்சு வார்த்தையை அவதானிக்க முடியும். இலங்கைத் தமிழர்களின் ஒருமைப்பாடு பொது மொழி, பொது கலாச்சாரம், வரலாறு ஆகியவற்றிலிருந்து உருவாகிறது. இது கடந்த காலத்தில் மட்டும் தங்கியிராமல் நிகழ் காலத்திலும் தங்கியுள்ளது. உலகெங்கணுமுள்ள தமிழர்களிடையே அவர்களும் அவர்களுடைய சந்ததிகளும் சமத்துவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழக்கூடிய எதிர் காலத்தை எப்படியாவது உருவாக்க வேண்டுமென்ற தீர்மானம் வளர்ந்து வருவது இதனை எதிர் காலத்திலும் தங்க வைத்துள்ளது. இலங்கைத் தமிழர்கள் ஓர் தேசிய இனம் என்பதை சிறிலங்கா அரசாங்கம் ஏற்றுக் கொள்வதற்கான பயனுள்ள கருத்துப் பரிமாறலில் ஈடுபட முயற்சிக்கிறோம். இது ஓர் பொதுக் கொள்கையோ, தத்துவமோ அல்ல. இது அவர்களது ஒருமைப்பாட்டின் உண்மை நிலையாகும். இது எதனால் பரிசோதிக்கப் படுகிதே? ஒரு போராட்டத்தினால் அதாவது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும், இதுவரை நடைபெற்ற முழு செயல் முறைகளினாலும். ஆகவே, பணிவுடன் சொல்லுகின்றோம். இலங்கைத் தமிழர்கள் ஒரு தேசிய இனம்; நாங்கள் ஒரு தேசிய இனம். தயவு செய்து அந்த அடிப்படையிலேயே எங்களை கருத்திற் கொள்ளவும். இதுவரை நாங்கள் எமது மக்கள் சார்பாகவே பேசினோம். நாங்களாக பேசவில்லை. பலர் இறந்து விட்டார்கள். பலர் இரத்தஞ் சிந்தியுள்ளார்கள். இப்போது காலம் கடந்து விட்டது. திம்புவிலோ அல்லது வேறு எங்காவதோ நிற்பதற்காக எம்மில் ஒருவரும் இரத்தம் சிந்தவில்லை. எங்கே நின்று கூறினாலும் நாங்கள் ஒரு தேசிய இனம். தயவு செய்து அதனை சந்தேகத்திற்குட்படுத்த வேண்டாம். தயவு செய்து நேரடியாகக் கூறுங்கள் எங்களை ஒரு மக்களாக கருதுகிறீர்களா என்று? இல்லை என்று கூறினால் அதனைக் கேட்டுக் கொண்டு நாம் போய் விடுகிறோம். நாம் எம்மை ஒரு மக்களாக அங்கீகரிப்பதை இந்தப் பேச்சு வார்த்தைகளிற்கான அடிப்படை நிலையாக எடுத்துக் கொள்கிறோம். மேலும் நாங்கள் கூறுகிறோம் எமக்கு ஓர் வரையறுக்கப்பட்ட பாரம்பரியப் பிரதேசம் உண்டு என்று. நாம் இந்த விடயங்களை ஓர் இரண்டாந்தர பள்ளியில் நடைபெறும் விவாதமாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நாம் தெற்கில் தாக்கப்படும் போது எங்கே ஓடுகிறோம்? எமது பாரம்பரிய பிரதேசங்களிற்கு. இதுவே பாரம்பரிய பிரதேசம் எது என்பதற்கான பரிசோதனைகளில் சிறந்ததாகும். நாம் எமது பாரம்பரிய பிரதேசங்களிலேயே தாக்கப்படும் போது இலங்கையை விட்டே வெளியேற்றப் படுகிறோம். இவ்வாறாக வாழ்வதற்கான புகலிடம் தேடியலையும் தமிழர்களை உலகெங்கணும் காணலாம்.

வடக்கு, கிழக்கு பிரதேசங்கள் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்பதனை 1957இல் பண்டா—செல்வா ஒப்பந்தமும், 1965இல் டட்லி—செல்வா ஒப்பந்தமும், 1972 அரசியலமைப்புக் கூட மொழி ரீதியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கு விஷேட ஏற்பாடுகளை செய்திருந்தது. எமது அனுபவங்களிலிருந்து அரசியல் உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள் ஆகியன அமுல் படுத்தப்படவில்லை என்பதை நாம் அறிவோம். இவை அமுல் படுத்தப் படாமைக்குக் காரணம் சம்பந்தப்பட்டவர்கள் கெட்டவர்கள் என நாம் கூறவில்லை. அவர்கள் தமது தேர்தல் தொகுதிகளிலிருந்து வற்புறுத்தப் பட்டார்கள். ஆகவே உண்மையான பிரச்சனை என்னவெனில் சிங்கள மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதே. தமிழர்களை ஓர் மக்களாக அங்கீகரித்து அவர்களுடன் சமத்துவமாக இருக்க சிங்கள மக்கள் விருப்பமாகவும் தயாராகவும் இருக்கிறார்களா? சமத்துவமாக இருந்து ஒரு அரசியலைத் தீர்மானிக்க அதாவது இரண்டு சமத்துவமான தேசிய இனங்கள் ஒன்றாக இருந்து ஒரு பல் தேசிய இனங்களைக் கொண்ட அரசு எப்படி இருக்கும் என்பதை உருவாக்க தயாராக உள்ளார்களா?

இந்த பேச்சு வார்த்தையின் ஒவ்வொரு கட்டத்தினையும் நாம் ஆட்சேபிக்கிறோம் என்பதை நேரடியாகவே கூறிக் கொள்கின்றோம். சிறிலங்கா அரசு கூறியுள்ளது இந்த பேச்சு வார்த்தைகளில் ஏதாவது தீர்வு ஏற்பட்டாலும் அதற்காக அபிப்பிராய வாக்கெடுப்பு நடாத்தப்பட மாட்டாது: அது அரசிய

9 ம் பக்கம் பார்க்க

### இந்தியா புறக்கணித்தது

சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசு கடந்த 15.06.1985 முதல் 20.07.1985 வரை கூட்டிய இந்து மகா சமுத்திரம் தொடர்பான விவகாரங்கள் பற்றிய மகா நாட்டின் ஆலோசனைக் கூட்டத்தில் இந்தியா கலந்து கொள்ளாமல் புறக்கணித்தது.

# இஸ்லாம் மக்களின் இன்றைய பிரதிநிதிகள் யார்?

இனவெறியுடன் செயல்படும் சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசானது, இலங்கையை ஒரு பௌத்த சிங்கள நாடாக மாற்றுவதற்கான முயற்சிகளில் தனது செயற்பாடுகளை திட்டமிட்டு நடாத்தி வருகின்றது. இதன் வெளிப்பாடாகவே தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் சிங்கள மக்களை வலுக்கட்டாயமாக குடியேற்றி வருவதுடன்; இனவாதத் தீயை மூட்டிவிட்டு தமிழ்பேசும் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களை தூண்டிவிட்டு இனக்கலவரங்களை ஏற்படுத்தி இனப்படுகொலைகளை நிகழ்த்துகின்றது. இந்நிலைகளினால் கூர்மையடைந்துவரும் தமிழ் ஈழப் போராட்டத்தில், தமிழ் பேசும் மக்களான இஸ்லாம் சமூகத்தினர் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்காக பற்பல யுக்திகளை கையாளுகின்றது.

அதாவது கிழக்கிலங்கையில் அண்மையில் நடந்த இந்து—இஸ்லாம் கலவரத்தில் அரசினரின் கூலியாட்கள் போராளிகள் போர்வையில் இஸ்லாம் சமூகத்தினரை தாக்கியும்; இஸ்லாம் மக்கள் போர்வையில் இந்து மக்களை தாக்கியும் கலவரத்தை மூட்டிவிட்டது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. இது தமிழ்பேசும் மக்களை பிரித்தாள்வதற்கு அரசு கையாண்ட சூழ்ச்சியாகும். ஆனால் சிறிலங்கா அரசின் காலித்தனங்களை காலங்காலமாகவே அறிந்திருந்த, அனுபவித்திருந்த மக்கள் அரசின் தூண்டுதல் செயல்பாட்டை அறிந்து அதிகமாக அலட்டிக் கொள்ளாதது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று தமிழ் பேசும் இஸ்லாம் சமூகத்தினரை மிரட்டுவது போன்று அரபு மக்களுக்கு எதிராக விளங்குவதும், அரபு மக்களை அழித்தொழிப்பதில் ஈடுபட்டு வருவதுமான இஸ்ரேலிய சியோனிஸ்ட்டுகளை சிறிலங்காவில் முகாமிடுவதற்கு அனுமதி அளித்துள்ளது. இவர்களைப்பற்றி நாம் அதிகம் கூறத் தேவையில்லை. இவர்கள் சர்தேச ரீதியாக பயங்கரவாத செயல்பாடுகளை செய்து உலகப் பயங்கரவாதிகள் எனப்பெயர் பெற்றவர்கள் குறிப்பாக அரபு மக்களின் பெரும் எதிரிகள் எனலாம்.

பலஸ்தீன மண்ணில் இருந்து, பலஸ்தீன அரபு மக்களை விரட்டிவிட்டு இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்கியவர்களும், லெபனானிலும் ஏனைய நாடுகளிலும் மக்களை அழிக்க முயன்று வரும் இச் சர்வதேசப் பயங்கரவாதிகளுடனும், இவற்றிற்கெல்லாம் ஒத்தாசையாக இருந்து, உலகை விழுங்கி ஏப்பம்விட துடிக்கும். அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் சிறிலங்கா பேரினவாத அரசு நெருங்கிய உறவை வளர்த்துள்ளது. 'இதிலிருந்து இஸ்லாம் மக்களை நேசிப்பதாக கூறும் இவ்வரசின் மக்கள் விரோதப் போக்கு அப்பட்டமாக தெரிகின்றது.

இவ் இனவெறி அரசின் மக்கள் விரோதப் போக்குகளுக்கு தங்கள் வர்க்க நலனும், சுய நலனும் காப்பதற்காக துணை போய் கொண்டிருக்கும் கொழும்பு முஸ்லிம் பூர்ஷ்வாத் தலைமைகள், தாங்கள்தான் இஸ்லாம் மக்களின பிரதிநிதிகள் எனப் பிதற்றித் திரிகின்றனர்.

அரசாளும் ஐ.தே ஆட்சியையில் இருந்து பாராளுமன்றக் கதிரைகளை முகட்டியாகப் பிடித்துக் கொண்டு தமது வர்க்க நலனுக்காக தமிழ் பேசும் இஸ்லாம் மக்களை; இஸ்ரேலிய சியோனிஸ்டுகளிலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமும் பலிகொடுக்க முனைந்து நிற்கின்றனர். இஸ்ரேலிய மனித விரோதிகளுக்கு எதிராகப் போராடும் அரபு மக்களுக்கு இதன் மூலம் பெரும் துரோகம் இழைத்துள்ளனர்.

இப்பாராளுமன்ற அரசியல்வாதிகள் நிச்சயமாக இம் மக்களின் பிரதிநிதியாக இருக்க முடியாது. இவர்கள் உண்மையில் கொழும்பு முஸ்லிம் வர்த்தக முதலாளிகளினதும், கிழக்கு மாகாண நிலப்பிரபுத்துவ முஸ்லிம்களினதும் ஏஜண்டுகளே. பரந்துபட்ட இஸ்லாம் மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் பொருளாதார நெருக்கடிகளை உணராது, சிந்திக்காது செயல்படும் சுய நலம் பேணும் முஸ்லிம் பூர்சுவா அரசியல் தலைமைகள், கூர்மையடைந்து வரும் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் முஸ்லிம் மக்கள் பங்கெடுத்துக் கொள்வதை தடுப்பதற்காக பல வழிகளிலும் செயற்படுகின்றனர். இந்நிலையில் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்கள் இப் பூர்சுவா அரசியல்வாதிகளை எப்படி பரந்துபட்ட முஸ்லிம் மக்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ள முடியும்?

ஏனெனில் இவர்கள் ஒடுக்குவோரின் பிரதிநிதிகளே. அண்மையில் பரந்துபட்ட இஸ்லாம் மக்களின் பிரதிநிதிகள் என்று மார் தட்டிக் கொண்டு, ஒடுக்குவோரின் பிரதிநிதிகள் சென்னையில் தமிழ் ஈழ போராளிகளை சந்தித்தனர்..

இவர்களின் நிலைப்பாடு யாதெனில், வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்று சேர்க்கும்போது இஸ்லாம் மக்களின் விகிதமானது குறைவாகும் என்றும் அதனால் கிழக்கு மாகாணம் தனி மாகாணம் ஆக்கப்பட வேண்டும் என்பதே.

இதை நோக்கும்போது, அரசு எந்நிலைப்பாட்டை எடுத்து தமிழ் பேசும் மக்களை துண்டாடி புதிய ஒடுக்குமுறை நிகழ்த்த முயற்சிக்கின்றதோ அம் முயற்சிக்கு வக்காலத்து வாங்கியே இவர்களின் வருகை அமைந்தது.

காலியில் பள்ளிவாசலில் நடந்த அக்கிரமத்தை; ஏறாவூர், காத்தான்குடியில் இஸ்ரேலியர் வருகைக்கு எதிராக நடந்த ஊர்வலத்தில் சிங்கள காடையர்களின் கொடுஞ் செயலை, தட்டிக் கேட்காது வாய்மூடி மௌனமாக இருந்த இக்கொழும்பு வாழ் வர்த்தக பூர்சுவா தலைமைகள் இன்று கொக்கரிக்க ஆரம்பித்துவிட்டது சிந்திக்கத் தூண்டியுள்ளது.

இன்று தமிழ் பேசும் மக்களின் தலைமைத்துவத்தை விடுதலை இயக்கங்கள் ஏற்றுக் கொண்டிருப்பது தங்கள் தலைமைத்துவத்துக்கு நேர்ந்த விழுக்காடு என உணர்ந்ததன் ஆதங்கமே இவர்களின் இக் கொக்கரிப்பு ஆகும்.

இவ்வர்க்க நலன் பேணும் இத்தலைமைகளின் சுயநல வெளிப்பாட்டை பூரணமாக புரிந்து கொண்டுள்ளனர் இஸ்லாம் மக்கள். இனியும் இத்தரகு — முதலாளித்துவ தலைமைகளின் சூழ்ச்சிகளுக்கு ஆளாக மாட்டார்கள். தமிழ் ஈழமே தங்களின் விடுதலைக்கு ஒரே வழி என்பதை நன்றாகவே உணர்ந்து செயல்பட்டு வருகின்றனர்.

# திம்புவில் 2ம் கட்ட...

8 ம் பக்கத் தொடர்ச்சி

லமைப்பிற்கு உட்பட்டிருக்கும் என்று. இது எம்மை ஆழ்ந்த கவலைக்குள்ளாக்குகிறது. ஏனெனில் நாங்கள் ஒரு நியாயமான மக்கள். அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெறாது என்பது உண்மையில் எதனைக் குறிக்கிறது? இது இங்கு அடையப்படும் தீர்மானங்களை சிங்கள மக்கள் முன் வைப்பதற்கு நாம் பயப்படுகிறோம் என்பதைக் குறிக்கவில்லையா? இதனை சிங்கள மக்கள் முன் வைக்க இப்போது நாம் பயப்பட்டால் இந்த தீர்வு எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்? ஆகவே இந்த விடயந்தான் எம்மைக் கவலைக்குள்ளாக்கியுள்ளது. ஏனெனில் ஏற்படுத்தப்படும் தீர்வானது நீடிக்கக் கூடியதாக இருக்க வேண்டுமென்ற பிரதமர் ராஜீவ் காந்தியின் கூற்றினை நாம் அங்கீகரித்துள்ளோம். இவ்வாறான தீர்வு ஒன்று சிங்கள மக்களின் பரந்தளவிலான சம்மதத்தைப் பெற்றிருந்தாலேயே சாத்தியமாகும். இல்லாவிடின் 1957, 65 இலேற்பட்ட தீர்வுகளிற்கும் ஒப்பந்தங்களிற்குமேற்பட்ட கதிதான் இதற்கும் ஏற்படும்.

ஒரு மக்கள் என்ற முறையில் நாங்கள் சொல்லுகிறோம் நாம் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுள்ளோம். இந்த உரிமையை அனுபவிக்கும் வழியை தேர்ந்தெடுப்பதுபற்றி நாம் ஒன்றாக இருந்து பேச முடியும். ஆனால் ஒருவர் ஆளுபவராகவும் மற்றவர் ஆளப்படுபவராகவும் இருக்கும் வகையில் உட்கார்ந்து பேசுவதற்கு நாம் தயாராக இல்லை. இந்த அடிப்படையில் நாம் இன்று இந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளவில்லை. நாங்கள் சொல்லுகின்றோம் நாம் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுள்ளோமென்று. ஏன் அதனைச் சொல்லுகின்றோம்? ஏனெனில், சர்வதேச, பொது, சிவில், அரசியல் உரிமை சாசனம் கூறுகிறது ஒவ்வொரு மக்களும் சுய நிர்ணய உரிமையை உடையவர்கள். ஏற்கனவே இருக்கும் நாடுகளின் பிரதேச ஒற்றுமையை ஐ.நா. சாசனம் அங்கீகரிக்கின்றது என்பதனை நாம் அறிவோம். டாக்டர் ஜெயவர்த்தனா கூறியது போல் காலனிகள் போன்ற சில சந்தர்ப்பங்களில் நாடுகளின் பிரதேச ஒற்றுமைகள் மீறப்படும் என்பதையும் தமிழ் மக்கள் அறிவார்கள். அதாவது 2ம் உலகப் போரிற்குப் பின்னர் சர்வதேச அரங்கில் சில சந்தர்ப்பங்களில் பிரதேச ஒருங்கிணைப்புத் தத்துவம் மீறப்பட்டது.

சர்வ தேச சட்டம் சிக்கலானது அல்ல. இதன்படி அந்நிய மக்களால் அடக்கி ஒடுக்கப்படும் ஒரு மக்கள் அந்த ஒடுக்கு முறையிலிருந்து தாங்களாகவே தம்மை விடுவித்துக் கொள்ளும் உரிமை அவர்களின் பிறப்புரிமையாகும். இதுதான் இன்றைய சர்வதேச சட்டத்தின் மறுக்கப்பட முடியாத வழக்கமாகும். நாங்கள் ஒரு ஒடுக்கப்பட்ட' மக்கள் என்று சொல்லுகின்றோம்? ஏன் அவ்வாறு சொல்லுகின்றோம்?

1951இல் சமஷ்டி அரசிற்கான கோரிக்கை எழுந்த போது அது இலங்கைத் தமிழர்களின் அமோக ஆதரவைப் பெற்றது. சிறிலங்கா அரசினால் இந்த சமஷ்டி அரசு ஏன் வழங்கப்படவில்லை? ஏன் சிறிலங்கா அரசாங்கம் நியாயமானதாக நடந்து கொள்ள பலமுடையதாக இருக்கவில்லை? ஏனெனில் பலமுள்ளவர்கள் தான் நியாயமாக இருக்க முடியும்.

1956இல் எழுந்த சமஷ்டி அமைப்பு அந்தக் கால கட்டத்தில் சுய நிர்ணய உரிமைக்கான ஒரு தீர்வாக அமைந்திருக்கும். ஆனால் அது மறுக்கப்பட்டமையே ஒரு ஒடுக்கு முறையாகும். ஏன் மறுக்கப்பட்டதெனில் சிறிலங்கா அரசு அதிகாரத்தை பங்கிட விருப்பவில்லை. இவ்வாறான ஒடுக்கு முறைகள் மொழி உரிமைகள், தரப்படுத்தல், குடியேற்றம் போன்ற செயல் முறைகளில் தொடர்ச்சியாக நடை பெற்று வந்தது. உண்மையில் என்ன நடந்தது? அடுத்தடுத்து வந்த சிங்கள அரசுகள் இலகுவான வழியைத் தேர்ந்தெடுத்தன. சிறிலங்காவினுள் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைக் கையாளும் வழியாக இன வாதத்தை பயன்படுத்தின. இதனால் இன்று இந்த சுய நிர்ணய உரிமை தனி அரசிற்கான கோரிக்கையாக மாறியுள்ளது. இவற்றுட்சில பேச்சு வார்த்தை மூலம் பெறப்பட முடியாதன. எங்களால் ஒருத்தரை ஒருவர் புரிந்து கொள்ள முடியும். இங்கே உட்கார்ந்து பேசும் பொழுது இவை உண்மையில் எதைக் குறிக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும். நாங்கள் இந்த விடயங்களைப் பற்றி பேசுவோம்.

ஆனால் இந்த உண்மைகளை மறைத்து விட்டு இங்கு சில சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளை எடுப்பதனால் ஏதாவது நிரந்தர தீர்வு ஏற்படும் என நம்பாமல் இருப்போம். அதற்கான காலம் கடந்து விட்டதென்றே நான் நினைக்கின்றேன்.

நான் இங்கு முதல் கூறிய விடயத்திற்கு திரும்பவும் வருவோம். தயவு செய்து கூறுங்கள் யாருடன் நீங்கள் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று. பய முறுத்தலின் அடிப்படையில் எந்த ஒரு கட்சியும் ஒரு பேச்சு வார்த்தைக்கு வர முடியாதென்பது தெளிவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் இப்பொழுது பய முறுத்தல்கள் வந்துள்ளன. 10000 மக்களை ஆயுதபாணியாக்குவோம் என்று கூறி எம்மை பயமுறுத்தி விட முடியாது. பேச்சு வார்த்தை தோல்வியுறின் பிரதமர் ராஜீவ் காந்தியை எம் மீது நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்துவோம் என்று சர்வதேச பத்திரிகைகளிற்கு அறிக்கை விடுவதால் எம்மைப் பய முறுத்தி விட முடியாது.

ஓர் நியாயமான தீர்வைக் காண்பதற்காகவே நாம் இங்கு வந்துள்ளோம்; வற்புறுத்தப்படுவதற்காக வரவில்லை. ஆகவே மீண்டும் நாம் பணிவுடன் சொல்லுகின்றோம். இது எமது போராட்டத்தின் ஓர் இடைவெளி. தயவு செய்து நீங்கள் நம்ப வேண்டாம் இலங்கைத் தமிழர்களை முற்றாக அழித்து விட முடியும் என்று. நீங்கள் நம்ப வேண்டாம் ஆள்பவர்களின் ஆதரவிலுள்ள அடிவருடிகளைக் கொண்டு இலங்கைத் தமிழர்களை சமாளிக்க முடியும் என்று. இவற்றில் ஒன்றையும் உங்களால் நடாத்த முடியாது.

ஏனெனில் தமிழ் மக்கள் தமது கால்களில் நின்று கூறுகிறார்கள் நாங்களும் மக்கள் தான்; நாங்கள் நியாயமானவர்கள் என்று. நாமெல்லோரும் உலகத்தில் ஒன்றாக வாழ வேண்டிய தேவையை உணருகிறோம். ஆனால் சமத்துவ அடிப்படையில் சமத்துவத்தை அங்கீகரிக்கும் அடிப்படையில்தான் இது நடை பெற முடியும்.

நாம் இங்கு வாதாடி விவாதத்தில் வெற்றி பெற வரவில்லை. ஏனெனில் அவ்வாறான விவாதம் பயனற்றது என்பதை நாம் அறிவோம். ஆனால் நீங்கள் ஒரு பயனுள்ள கருத்து பரிமாறலிற்கு விரும்பினால் நாங்கள் அதனைப் பரிமாறுவோம். அதன் மூலம் ஏதாவது அடைய முடியுமா எனப் பார்ப்போம். ஏனெனில் கருத்துப் பரிமாறலின் புரிந்துணர்வில்தான் ஏதாவது தீர்வு உருவாக்கப்படலாம். இல்லாவிடில் நாங்கள் வெற்றுக் காகிதத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருப்போம். அது எங்களை ஒரு இடத்திற்கும் இட்டுச் செல்லாது. நன்றி.

# இந்தியாவின் நிலைப்பாடும், திம்பு பேச்சுவார்த்தையில்...

3 ம் பக்கத் தொடர்ச்சி

இதன் முக்கிய அம்சமானது ''பிரதேச கவுன்சில்கள் (regional Councels) ஏற்படுத்துவதே.''

### தொடரும் பிரித்தாளும் முயற்சிகள்

அரசு பிரதேச கவுன்சில்களை ஏற்படுத்துவது மூலம், வடகிழக்குப் பகுதிகளிலுள்ள தமிழ்பேசும் மக்களை பிரித்து விடுவதற்கே முனைவது நன்றாகத் தெளிவாகின்றது.

''முதலாளித்துவ அரசுகள் தங்களை நிலை நிறுத்திக் கொள்ளும் முகமாக, மக்களை பலவழிவகைகளிலும் (இன, மத, ஜாதி, மொழி, பிரதேசம்) பிரித்தாள்வதை தனது தந்திரமாகக் கையாண்டுவருவது கண்கூடு.''

சிறிலங்கா தரகு முதலாளித்துவ அரசும், இதற்கான முஸ்தீபுகளிலேயே இறங்கியுள்ளது. இதன் மூலம், மக்களின் விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்க முனைகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் பேசும் மக்களை பிரித்து விடுவதன் மூலம், மக்களின் ஒன்றுபட்ட சக்தியை சிதறடிப்பதே இவ் இனவெறி அரசின் நோக்கமாகும்.

ஏற்கனவே, கிழக்கு மாகாணப் பகுதிகளில், பல சிங்களக் குடியேற்றங்கள் நிகழ்த்தி, பல பகுதிகளை தன்வசம் கைப்பற்றியுள்ளது. மேலும், புதிய புதிய குடியேற்றங்களை திட்டமிட்டு நடத்தப்படுகின்றது.

இதனால் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படக்கூடிய சூழ்நிலையைத் தோற்றுவிப்பதே, சிறிலங்கா இனவெறி அரசின் நோக்கமாகும்.

எனவே, திம்பு பேச்சுவார்த்தையில் அரசினரின் பிரதிநிதிகளால் எடுத்துரைக்கப்பட்ட அம்சமானது தமிழ் பேசும் மக்களை ஒன்று சேரவிடாமல் பிரித்து, அவர்களின் புரட்சிகர குணாம்சங்களை முறியடித்து புதிய ரீதியில் ஒடுக்குமுறையை நிகழ்த்துவதற்கான திட்டமேயாகும்.

### நான்கு அம்சக் கோரிக்கை

இனவெறி அரசின் பிரதிநிதிகளின் வெற்றுப் பேச்சுக்களையும், பொருத்தமற்ற அம்சங்களையும் முற்றாக நிராகரித்த எமது இயக்க பிரதிநிதிகள், 4 அம்சக் கோரிக்கை ஒன்றை முன் வைத்தனர்.

அவையானவன:

1. இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்கள் தனித்துவமான தேசிய இனம்.
2. தமிழ் பேசும் மக்களுக்கென இலங்கையில் அடையாளம் காணப்படக்கூடிய தொடர்ச்சியான, தனியானதொரு தாயகம் உண்டு.
3. இவ் அடிப்படையில் இலங்கைத் தீவில் வாழும் தமிழர்க்கு சுயநிர்ணய உரிமை உண்டு.
4. இலங்கைத் தீவை தமது சொந்தமெனக் கருதும் (முக்கியமாக — மலையகம் வாழ் தமிழ் மக்கள்) அனைவருக்கும், குடியுரிமை உட்பட அனைத்து ஜனநாயக உரிமை உண்டு.

விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள் இக்கோரிக்கையை விட்டு, இதை அங்கீகரித்தே சிறிலங்கா அரசு தமிழினப் பிரச்சினைக்கான தீர்வைத் தரவேண்டும் என வலியுறுத்தினார்கள்.

இதை, சிறிலங்கா அரச பிரதிநிதிகளின் தலைவர் H.W. ஜெயவர்த்தனா, சிறிலங்கா அரசு அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனே யுடன் கலந்தாலோசிக்க வேண்டும் எனக் கூறினர்.

இந்நிலையில் பேச்சு வார்த்தை ஆகஸ்ட் 12ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

### அரசியல் ஒப்பந்த மீறல்களும் போர்த் தயாரிப்புகளும்

மேலும், இப் பேச்சு வார்த்தையின் போது. விடுதலை இயக்க பிரதிநிதிகள், போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கேட்டுக் கொண்டபடி சிறிலங்கா அரசு நடந்து கொள்ளவில்லை என குற்றம் சாட்டினர்.

அதாவது, கடல் கண்காணிப்பு வலயம், இன்னமும் நீங்கப்படவில்லை. இப்பேச்சு வார்த்தை காலத்திலேயே ஆயுதங்கள் வந்து இறங்கியுள்ளமை. யுத்த நிறுத்த மீறல்களை இராணுவம் ஆங்காங்கே நிகழ்த்துவது. கைது செய்யப்பட்டோர்களின் விடுதலை சம்பந்தமாக அரசு ஒப்புக் கொண்டபடி நடந்து கொள்ளவில்லை என்பதே!

அரசும் உடனே 543 கைதிகளை விடுவிப்பதாக அறிவித்தது. ஆனால், இன்றை வரை கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்களா? என்பதற்கான தகுந்த ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

மற்றும் வன்முறைச் சம்பவங்களை நிகழ்த்தி வருகின்றது. மேலும். ஆயுதங்களும் வந்து குவிந்துள்ளன.

### திம்பு 2வது கட்டப் பேச்சு வார்த்தையில்..

இந்நிலையில் மீண்டும் திம்புவில் ஆகஸ் 12இல் ஆரம்பமான பேச்சு வார்த்தையைப் பற்றி நோக்குவோம்.

1வது கட்டப் பேச்சு வார்த்தையில், விடுதலை இயக்கப் பிரதிநிதிகளால் முன் வைக்கப்பட்ட நான்கு அம்சக் கோரிக்கைகள் பற்றி திரும்பவும் இயக்க பிரதிநிதிகள் பிரஸ்தாபித்தனர். அத்துடன் சிறிலங்கா அரச இராணுவத்தினரின் போர் நிறுத்தம் மீறிய செய்கைகளையும் கண்டித்தனர்.

போராளிகள் விடுத்த 4 அம்சக் கோரிக்கைகளில் முதல் மூன்று கோரிக்கைகள் ஏற்க முடியாது எனவும், நான்காவது பரிசீலிப்பதற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் சிறிலங்கா அரச பிரதிநிதிகள் கூறினர். அதாவது தமிழ் பேசும் மக்களை தேசிய இனமாக அங்கீகரிக்க முடியாதென்று மறுத்து விட்டனர்.

விவாதம் காரசாரமாகவே நடந்தது. அங்கு எமது இயக்கத்தின் (ரெலோ) பிரதிநிதியான பிரபல சிரேஷ்ட சட்டத்தரணி சத்தியேந்திரா அவர்கள் நீண்ட நேரம் உரையாற்றி, பேச வந்ததன் நோக்கம் பற்றியும், தமிழ் பேசும் மக்கள் நிலை பற்றியும் தெளிவாக்கினார்.

இக்காலத்தில் வவுனியாவிலும், திருகோணமலையிலும், சிறிலங்கா அரச இராணுவம் நடத்திய வெறியாட்டத்தில் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் உயிர் பறிக்கப்பட்டமையால், இச் சம்பவத்தின் பின்பும் சிறிலங்கா அரசுடன் ஒன்றாக மேசையில் அமர்வதே வேதனைக்குரியதாகும்.

இந்நிலையில், விடுதலை இயக்கப் பிரதிநிதிகள், பேச்சு வார்த்தை மன்றத்தை விட்டு வெளி நடப்புச் செய்தனர். இத்துடன் 2வது கட்டப் பேச்சு வார்த்தை முற்றுப் பெற்றது.

### பேச்சுவார்த்தை அரசதரப்பின் வலுவூக்கலே

குறிப்பாக நாம் உணர்வது யாதெனின், அரசின் பேச்சு வார்த்தை நாடகம் ஆனது தன்னைப் பலப்படுத்துவதற்கானதேயன்றி, தமிழினப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை (Political Solution) முன்வைக்கும் நோக்கமன்று. மாறாக இனவெறி அரசு ராணுவத் தீர்விலேயே (Military Solution) முழு நம்பிக்கை வைத்து செயல்படுகின்றது.

ஆனால், வளர்ந்துவரும் பொருளாதார நெருக்கடிகளுக்கும், சிங்கள தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டங்களிற்கு ஈடு கொடுப்பதற்காகவும், வெளிநாடுகளிருந்து கடன் வாங்கிக் கொள்வதற்காகவும் தற்காலிகமாக ஒரு தீர்வை தமிழ் பேசும் மக்கள் மேல், சிறிலங்கா அரசு திணிக்க முயலும், ஏனெனில், தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நெருக்கடியான சூழ்நிலைக்கு சிறிலங்கா அரசு தள்ளப் பட்டிருக்கின்றதே யாகும்.

ஆகவே, சிறிலங்கா அரசு தரும் தற்காலிகமான எத் தீர்வும், எமது விடுதலைப் போராட்டத்தை பின் தள்ளுவதுடன், அரசின் எதிர்ப்புரட்சி சதிகளுக்கு துணை போனதாகவே முடியும்.

யையும் தமிழ் பேசும் மக்களை அழிப்பதற்கான ஒரு சாதகமான கருவியாகவே பயன்படுத்துவதையே காணக் கூடியதாயுள்ளது.

சிறிலங்கா அரசின் இன ஒழிப்பு செயற்பாடுகளை பூரணமாகவே அறிந்த நாமும், இப் போர் நிறுத்தக் காலத்தை எமக்கு சாதகமாகப் பயன்படுத்தித் தொடர்ந்து, எமது இலக்கை அடையும் வரை போராடுவோம்.

எமது இறுதியும் அறுதியுமான தீர்வு தமிழீழமே. இக் கோரிக்கைக்கு குறைவான எந்தத் தீர்வும் எமது பிரச்சனையைத் தீர்க்கவும் மாட்டாது; குறைவான எத் தீர்வையும் நாம் ஏற்றுக் கொள்ளவும் மாட்டோம்.

## செய்திகள்

### சுற்றுலா பயணிகள் மீது துப்பாக்கிச் சூடு

ஏற்கனவே சுற்றுலா பயணிகளின் வருகைக் குறைவால் ஆட்டங்காணும் சிறிலங்கா பொருளாதாரத்தை மேலும் ஆதாளபாதாளத்திற்கு வீழ்த்தும் நோக்குடன் சிறிலங்கா ஆக்கிரமிப்புப் படைகள் செயல்படுகின்றன. கடந்த ஜூன் மாத முதல் வாரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள் பொத்துவில் என்னும் இடத்தில் சுற்றுலாப் பயணிகளான இத்தாலியர்கள் இருவர்மீது சிறிலங்கா இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. கார் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த இவர்களை மறித்து துப்பாக்கி பிரயோகம் நடைபெற்றது.

### தாதிமார் வேலை நிறுத்தம்

சிறிலங்கா தரகு-முதலாளித்துவ அரசின் பொருளாதாரக்கொள்கையால் ஏற்படும் வாழ்க்கைப் பளு தாங்காமல் சிறிலங்கா தாதிமார் கடந்த ஜூலை மாத ஆரம்பத்தில் வேலை நிறுத்தத்தில் குதித்தனர் சுமார் 6,000க்கும் அதிகமான தாதிமார்கள் இவ்வேலை நிறுத்தத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். இதனால் ஆயிரக்கணக்கான நோயாளிகள் பாதிப்படைந்தபோதும் அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

## பேச்சுவார்த்தை.......

4 ம் பக்கத் தொடர்ச்சி



## எழுச்சி

நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக, எழுச்சி வெளிவராது தடங்கல் ஏற்பட்டமைக்கு வருந்துகிறோம். மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும். எழுச்சி தொடர்ந்து ஒழுங்காக வெளிவரும் என்பதையும் அறியத் தருகிறோம்.

எழுச்சியின் ஒவ்வொரு இதழும், பல தடைகளை தாண்டி உங்களிடம் வந்தடைகின்றது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

மற்றும் வாசகர்களிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

பத்திரிகைக்குழு

தொடர்புகட்கு:

இரா. தமிழ் செல்வன்
3/35 வெல்கம் காலனி,
அண்ணாநகர் மேற்கு
சென்னை — 101.

# பேச்சுவார்த்தையின் பின்னணியில்...

பகைச் செயல் நிறுத்தம், பேச்சுவார்த்தை என ஸ்ரீலங்கா தரகு – முதலாளித்துவ அரசு கூறிக்கொண்ட போதும் இவையாவும், இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மீதான பிரகடனப் படுத்தப்படாத யுத்தத் தயாரிப்புக்களுக்காகவே என்பது முழுக்க முழுக்க உண்மையாகியுள்ளது.

முன்பு நடந்த வட்டமேசை மாநாடு என்ற பேச்சுவார்த்தைகளின்போது; இஸ்ரேல் மொசாத் படை தொடக்கம் பிரித்தானிய SAS உளவுப் படை ஈறாக இலங்கை மண்ணிலே காலைப்பதித்தன. பல நவீனகர நாசகாரி ஆயுதங்கள் சிறிலங்காவில் குவிந்தன. இதுமட்டுமல்லாமல் 250 பேரைக் கொண்டதும் – 154 பேரைக் கொண்டதுமான இரண்டு அமெரிக்க யுத்தக் கப்பல்கள் கொழும்பு துறை முகத்திற்கு வந்து சென்றன.

இதுபோலவே தற்போதைய பகைச் செயல்நிறுத்த பேச்சுவார்த்தைகளின்போதும் தாய்லாந்திடம் இருந்து 7 யுத்த விமானங்களையும் – பாகிஸ்தானிடம் இருந்து ஹெலிகாப்டர் பொருத்தக் கூடிய 4 யுத்தக் கப்பல்களையும்–சீனாவில் இருந்து 18 பீரங்கி பொருத்தப்பட்ட படகுகளையும் – டிரேடிங் காப்பரேஷன் மூலம் 20,000 நவீனகர ஆயுதங்களையும் பெற்றுள்ளது.

இவற்றோடு 700 இராணுவத்தினருக்கு பாகிஸ்தானில் கொரில்லாப் பயிற்சி அளிக்கப்படுகிறது. "கட்டு குறுத்தே" என்ற இடத்தில் உள்ள பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் 10,000 பேருக்கு மொசாத் படையினர் பயிற்சி அளிக்கிறார்கள். இதற்காக பிரித்தானிய SAS உளவுப் படையைச் சேர்ந்த ஜெனரல் 'ஸ்மித்' என்பவர் சிறிலங்காவிற்கு விசேஷமாக வரவழைக்கப்படுகிறார். றோயல் கல்லூரி–ஆனந்தா கல்லூரி–சேனநாயக்கா கல்லூரி–மகாநாமா கல்லூரி மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இராணுவ அதிகாரிகளாக கடமையாற்றியவர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்படுகிறார்கள்.

இத்தோடு நின்று கொள்ளாமல்; ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களின் புரட்சிகர குணாம்சத்தை மழுங்கடிக்கும் நோக்குடன், அவர்கள் தரகு முதலாளித்துவ அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுவதை மந்தப் படுத்துகின்ற அல்லது பின்னடிக்கும் தந்திரோபாயமாக சிறிலங்கா தரகு முதலாளித்துவ வாதிகள் தங்கள் பிரச்சாரச் சாதனங்களினூடாக அதாவது வானொலி, ரூபவாகினி, அரசாங்க பத்திரிகைகள் மூலமாக "யுத்த மனோ நிலை" ஊட்டப்பட்டு ஒவ்வொரு சிங்கள மக்களையும் ஒவ்வொரு துட்டகைமுனுவாக மாற்றுவதில் முனைந்து நிற்

சிற்லங்கா அமைச்சாகளை ஆட்டிப்படைக்கும் புத்தபிக்குகளின் திட்டங்களுக்கமைய வடக்கிலும், கிழக்கிலும் தொகுதிக்கு 700 சிங்கள குடும்பங்கள் குடியமர்த்தப் படுவதோடு, தென்பகுதியில் 18,000 தமிழ் குடும்பங்களை வலுக்கட்டாயமாக குடியமர்த்துவதற்கான தயாரிப்புகளும் நடைபெற்று வருகின்றன. வடக்கு, கிழக்கு பகுதிகளில் சிங்கள மக்களை குடியமர்த்துவதற்காக தேசிய பாதுகாப்பு நிதிக்கு திரட்டப்பட்ட 4 கோடி ரூபாயில்; 50 இல. ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சிங்கள மக்களை திட்டமிட்டு குடியமர்த்தல் என்பது, ஒரு புறம் தமிழ் பேசும் மக்களின் தேசியத் தன்மையை இல்லாதொழிக்கிறது. மற்றோர் புறம் சிங்கள மக்களின் புரட்சிகர குணாம்சத்தை மழுங்கடித்து அவர்களை தேசிய வெறியில் அள்ளுப்பட வைக்கிறது. இதன் மூலம் சிறிலங்கா தரகு முதலாளித்துவவாதிகள் தமது நவ–பாஸிஸ ஆட்சியை பாதுகாத்துக் கொள்கின்றனர் அல்லது நிலை நிறுத்திக் கொள்கின்றனர்.

அதாவது, 1977ம் ஆண்டு UNP அரசு பதவி ஏற்றதும் இலங்கைச் சந்தையை உலக ஏகாதிபத்தியங்களுக்கு தாரை வார்த்துக் கொடுத்தது. அதன் 1977ம் ஆண்டு புதிய கொள்கைகள் கலப்படமற்ற அசல் ஏகாதிபத்திய விசுவாசக் கொள்கையாக இருந்ததும், அதை வெற்றிக்குக் கொண்டுவர சுதந்திர வர்த்தக வலயம் என்ற பெயரில் பன்னாட்டுக் கம்பனிகள் நுழைந்து முன்னின்று உழைத்ததும் யாவரும் அறிந்ததாகும். தொடர்ந்து பிரிட்டிஷ் பாராளுமன்ற முறை மூலம் ஏகாதிபத்திய விசுவாசமாகப் பூரணமாக இயங்கி மக்களை ஒடுக்க முடியாதெனக் கண்டு கொண்ட JR ஜெயவர்த்தனா அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆலோசனையின் பேரில், பாராளுமன்றத்தைப் பாவித்தே அதன் செல்வாக்கை இல்லாமல் செய்து ஜனாதிபதி ஆட்சியை கொண்டு வந்து நவ—பாஸிஸ ஆட்சியை உருவாக்கியதும் வரலாறு கூறும் பாடமாகும்.

இன்று இலங்கையின் உற்பத்தி விநியோகத்தில் சர்வதேச கம்பனிகளே முதன்மையான ஆதிக்கம் செலுத்துகின்றன.

உதாரணமாக, பிரதான உற்பத்திப் பொருளான தேயிலையை லிப்டன், புரூக் பொண்ட்ஸ் கம்பனிகளே தம் ஆதிக்கத்தில் வைத்துள்ளன. இரசாயனப் பொருட்கள் இம்பீரியல் கெமிக்ஸ் இன்டஸ்ரீஸ் ஆதிக்கத்திலும், பற்பசை முதல் சலவைப் பவுடர் வரையுள்ள நுகர் பண்டங்கள் லிவர் பிரதேஸ் உற்பத்தியிலும் சிகரெட் அமெரிக்க புகையிலைக் கம்பனிகளின் ஏகபோகத்திலும் இன்று உள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியம் நவ–காலனிகளை உருவாக்குவதற்காக ஏற்படுத்திய உலக வங்கியே இன்று இலங்கையை ஆட்டிப் படைத்து ஆட்சி புரிகிறது. இலங்கையின் வரவு செலவுத் திட்டம் உட்பட அமெரிக்க டொலரின் வில்ல் யர்வற்றையும் உலக வங்கியே தீர்மானிக்கிறது. பல்வேறு திட்டங்களை நடத்த இவ் வங்கியும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் கடன் வழங்கியுள்ளது. இதே வேளை உலக வங்கியின் சிபார்சில் பிற அமெரிக்க சார்பான முதலாளித்துவ நாடுகளும் திட்டக் கடன்கள் வழங்கியுள்ளன.

இது மட்டுமல்லாமல் விவசாய அபிவிருத்தி வலயங்கள் என்ற போர்வையில் ஏராளமான நிலங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

உதாரணமாக பார்ம் எண்ணெய் பயிர்ச் செய்கைக்காக மலேசியாவின் 'குட்த்திரி' நிறுவனத்திற்கு மகாவலிப் பகுதியில் 24,000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. சேருவிலை தொகுதியில் வாழைப்பயிர் செய்கைக்காக ஒல்வாந்து நிறுவனம் ஒன்றுக்கு 10,000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. மாதுறுஓயா பிரதேசத்தில் ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றிற்கு 17,750 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டள்ளது. அதே நிறுவனத்திற்கு அம்பாறை மாவட்டத்தில் 40,000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. கண்டி மாவட்டம் உடுதும்பர பிரதேசத்தில் பிரான்ஸ் நிறுவனம் ஒன்றிற்கு 6,000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. எண்ணை சுத்திகரிப்பிற்காக திரிகோணமலை பிரதேசத்தில் அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு 2,500 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. நெஸ்ரே கம்பனிக்கு 10,000 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது. இவற்றோடு அமெரிக்க வானொலி நிலையத்திற்கு 1,000 ஏக்கர் நிலம் வழங்கப்

இந்த வெளிநாட்டுப் பன்னாட்டு கம்பனிகளை திறப்பதற்கு ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் கொண்டு வந்த சட்டங்கள் எண்ணில் அடங்கா. வேலை நிறுத்தம் செய்யும் உரிமை கிடையாது—சம்பள உயர்வுப் போராட்டம் கிடையாது. இரவு, பகல்வேலை, கம்பனிகள் கூறுகிறபடியே செய்ய வேண்டும்—கம்பனி கட்டளையிடின் பெண்களும் இரவில் கட்டாயமாக வேலை செய்ய வேண்டும்—சுதந்திர வர்த்தக வலைய கம்பனிகளை தேசிய உடைமையாக்க முடியாது—அப்படி தேசிய உடைமையாக்கின் கடுமையான நஷ்ட ஈடு கொடுக்கப்பட வேண்டும் போன்ற ஆயிரக்கணக்கான சட்டங்களை இயற்றிய ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கத்தின் உத்தரவின் பேரில் இலங்கையில் நேரடியாக மிச்சமுள்ள இரத்தத்தையும் தொழிலாள வர்க்கத்தின் உடம்பிலிருந்து உறிஞ்சிக் குடிப்பதற்கு வழி திறந்து விட்டது.

உதாரணமாக, 13.9 மில்லியன் டொலர் செலவில் ஆரம்பிக்கப்பட்ட பிரிமா சிங்கப்பூர் ஆலை 1983ல் 4 மில்லியன் டொலர் லாபம் அடைந்துள்ள வேளையில் இதே செலவில் ஆரம்பிக்கப்பட்ட பிரிமா இலங்கை ஆலை 1983ல் 11 மில்லியன் டொலரும், 1984ல் 12–மில்லியன் டொலரும் சுளையாகத் திரட்டுவதற்கு இலங்கை தொழிலாள வர்க்கத்தின் இரத்தத்தை பன்னாட்டுக் கம்பனிகள் உறிஞ்சிக் கொண்டிருக்கின்றன.

இப்படியாக, உலக ஏகாதிபத்தியங்களின் வலையில் சிக்குப்பட்டுள்ள சிறிலங்கா தரகு முதலாளித்துவவாதிகளுக்கு தங்கள் ஆட்சியை பாதுகாத்துக் கொள்ள தமிழ் மக்கள் மீதான தேசிய இன ஒடுக்குமுறை தவிர்க்க முடியாது. அதாவது பன்னாட்டுக் கம்பனிகளின் சுரண்டல் கொடுமைகள் தாங்காது சிங்கள உழைக்கும் மக்கள் கொதித்தெழும்பிய போதெல்லாம் சிங்கள பேரினவாத அலையைப் பாச்சி சிதறடித்து சின்னாபின்னமாக்கியது. மற்றோர் புறம் பன்னாட்டு மூலதனக் கம்பனிகளுக்கு நிலங்களை தாரை வார்ப்பதால் எழும் சிங்கள விவசாயிகளின் நிலப்பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அவர்களை திட்டமிட்டு தமிழீழப் பிரதேசங்களில் குடியமர்த்துகிறது. இதனடிப்படையில் தான் பாமர சிங்கள மக்களை மட்டுமல்ல படித்த சிங்கள மக்களையும் இனவாதிகளாக்கி தமது ஆட்சியை தொடர்ந்து நிலை நிறுத்தும் நோக்கத்துடன் ஆயுதங்கள் வழங்கி, ஆயுதப் பயிற்சி அளித்தும் வருகிறது.

சிறிலங்கா நவ–பாஸிஸ்டுக்களின் சதிகளை தமது நேச சக்திகளின் துணையுடன் முறியடித்து தமிழ் பேசும் மக்கள் தமிழ் ஈழத்தை வென்றெடுக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை, தமிழ் ஈழப் போராட்டமென்பது சிங்கள மக்களின் விடுதலைக்குமான அஸ்திவாரமே, எனவே சிங்கள மக்களுக்கு சிறிலங்கா தரகு முதலாளித்துவவாதிகள், வழங்கும் ஆயுதங்கள் அவர்களுக்கு எதிராகவே திரும்பும் நாள் வெகு தொலைவில் இல்லை.

## நிதியின் தாக்கம் புரட்சிப் பாதையில்

சிறிலங்கா அரசு பேச்சு வார்த்தை நாடகமாடி, தமிழ் பேசும் மக்களைப் படுகுழியில் தள்ள திட்டங்கள் தயாரித்து வருகின்றது. அதாவது, தனது அரசைக் காப்பாற்றும் நோக்கில் வெற்று நாடகமாடி, விடுதலைப் பாதையைத் திசை திருப்பி, மக்களின் புரட்சிகரக் குணாம்சங்களைச் சிதறடித்துவிட, வெற்று தீர்வுகளை தமிழ் பேசும் மக்கள் மேல் திணிக்க முயற்சிக்கின்றது.

விடுதலை போராட்டத்தை புற நிலை காரணிகளை தீர்க்கமாக் ஆய்வு செய்து முன்னெடுத்திருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம், மேலும் மேலும் தனது சக்தியை பெருக்கிக் கொண்டு இறுதி போராட்டத்தை எடுக்க பாரிய அளவில் நிதி யுதவி வேண்டியுள்ளது.

ஆகவே, ஒடுக்கப்படும் மக்களின் விடுதலையை வென்றெடுக்க — தமிழ் ஈழத்தை வென்றெடுக்க அனைத்து மக்களிடமும் தனது உதவி கரத்தை நீட்டியுள்ளது. தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காகப் போராடும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்துக்கு நிதியுதவி வழங்குவீர்.

K. ANANDAN
A/c 11506
INDIAN OVERSEAS BANK
BRANCH — VIRUGAMBAKKAM
MADRAS-600092
SOUTH INDIA

## அம்பாறையில் 15 தமிழர்கள் படுகொலை

இவர்கள் வீட்டில் இருந்து வீடியோவில் படம் பார்த்துக் கொண்டிருந்த வேளையில் அத்துமீறி உட்புகுந்த இராணுவம் கண்மூடித்தனமாக அங்கிருந்தவர்களைப் படுகொலை செய்தது.

மற்றும், இச்சம்பவத்திற்கு முன் பான்னாரிலும், மட்டக்கிளப்பிலும் 42 தமிழர்கள் அரசு படைகளினால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

21.9.85 அன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்வெட்டு என்னுமிடத்தில் 15 தமிழர்களை சிறிலங்கா அரச இராணுவம் படுகொலை செய்தது.

நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்

# வீர அஞ்சலி



தோழர் தயா (தேவன்)



தோழர் குமார்

தோழர் தனம்



தோழர் இளங்கோ



தோழர் பிரதா

புளியங்குளத்தைச் சேர்ந்த தோழர் இளங்கோ, கிளிநொச்சியில் இயக்க வேலை திட்டங்களில் பங்காற்றிக் கொண்டிருக்கும் வேளையில், பொலிஸ் அதிரடிப்படையினரால் சுடப்பட்டு இறந்தார்.

தோழர் இளங்கோவின் இறப்பிற்கு முன்பு, இத்தோழரை தேடிய அரச இராணுவம், இவர் சிக்காததால் கோபமுற்று இத்தோழரின் குடும்பத்தில் யாபேரையும் அழித்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

திருநெல்வேலியைச் சேர்ந்தவரான தோழர் பிரதாப், வட்டுக்கோட்டை சேர்ந்தவரான தோழர் தனம் ஆகியோர் அரச இராணுவத்தினரால் கைதாகி, வவுனியா முகாமில் வைத்து சுடப்பட்டு மரணத்தைத் தழுவிக் கொண்டனர்.

## அஞ்சலி

தமிழீழக் கோரிக்கையானது சர்வதேச ரீதியாக வலுப்பெற்றுவரும் இந்நாளில் சிறிலங்கா அரசின் எதிர்ப் பிரச்சாரத்திற்கு துணைபோய்க் கொண்டிருக்கின்றனர் பிற்போக்குவாத பயங்கரவாதிகள்.

மக்களின் விடுதலையே தமது நோக்கமென பிதற்றிக் கொண்டு திரியும் இப்பயங்கரவாதிகளின், தீர்க்க சிந்தனையற்ற பிற்போக்கான வெறி, பிடித்த பயங்கரவாதச் செயலே எமது இயக்கத்தின் முழு ஆதரவாளராகவும், பகுதி நேர ஊழியனாக பிரச்சார வேலைத்திட்டங்களில் பங்காற்றி வந்த தோழர் இராதாகிருஷ்ணன் கோரமாகக் கொலை செய்யப்பட்ட நிகழ்ச்சியாகும்.

சிறிலங்கா அரசின், இன ஒழிப்பு நடவடிக்கைக்கும் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கும் தமிழ்பேசும் மக்கள் சமூகத்தில், பெரும் குடும்பப் பொறுப்பை சுமக்க முடியாமல் சுமந்து கஷ்டஜீவனம் நடத்திவரும் தோழர் இராதாவின் மறைவு. அவரின் குடும்பத்தை நிர்க்கதிக்குள்ளாக்கியுள்ளது.

கீழே அவரின் மனைவியும் 5 பிள்ளைகளும் உற்றார் உறவினர்களும் இப்படு கொலைக்கு நியாயம் கேட்டு முகமாகவிட்ட துண்டுப் பிரசுரம்.

## இயக்கங்களே! பதில் என்ன?

## மக்களே! நியாயம் கேளுங்கள்

### திரு. வி. இராதாகிருஷ்ணன் (ராதா)

எமர்சன் வீதி, [illegible] கிளிநொச்சி.

கடந்த 1985-07-25 அன்று இரவு வீட்டில் இருந்து துப்பாக்கி தாங்கிய நான்கு இளைஞர்கள் விசாரணைக்கென அழைத்துச்சென்று படு கேவலமான முறையில் துப்பாக்கிக் கத்தியால் (பைனட்) நெஞ்சிலும், முதுகிலும் சுமார் 41 குத்துக்கள் குத்திய அந்த உரிமை கோரப்படாத கொலைஞர் பெயர்

### பயங்கரவாதமன்றி வேறென்ன?

இந்தக் கொலை திட்டமிடப்பட்டு தனிநபரின் கருத்துக்களுக்கும் தனி நபர் முடிவுகளுக்கும் தலையசைக்கும் கூலிப்படைக்கு நிகரொத்த குழு ஒன்றினால் மேறகொள்ளப்பட்டதே!

இராணுவ நெருக்கடிகளுக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் முகங்கொடுக்கமுடியாத இந்த உத்தரவாதமற்ற காலகட்டத்தில் மக்கள் பாதுகாப்பே முக்கியமெனவும் மக்களுக்காகவே போராடுகிறோம் எனவும், மக்கள் தீர்ப்பே இறுதியானதெனவும் உதட்டளவில் மட்டும் கூறிக்கொள்ளும் பிற்போக்குத்தனமான குழுக்கள் இன்னும் பல அப்பாவி ராதாக்களை தானே கொல்லும் அவர்களுக்கும் எம்மைப்போல இளம் மனைவியும், 5 பிள்ளைகளும்கூட இருக்கலாம் வறுமையும் கூடவே இருக்கும்.

ராதாமேல் குற்றமிருப்பின் விசாரணை செய்திருக்கலாம், சமூகத் துரோகி எனக் கண்டிருந்தால் மக்கள் முன் பகிரங்க தண்டனை வழங்கியிருக்கலாம் அல்லது தமிழ்ப்பகுதிகளில் நடந்த எம்மின ஏனைய கொலைகளைப்போல மக்கள் அபிப்பிராயத்தையும், நெருக்கு வாரத்தையும் பார்த்து பின்னாலாவது உரிமைக் கோரியிருக்கலாம் ஒன்றுமே அந்த கொலையாளிக்கு முடியவில்லை.

நியாயப்படுத்த தலைமைப்பீடமும், பிரசுரம் அடிக்க பிரச்சாரப் பிரிவும் இன்றுஇல்லையோ?

முற்போக்கு முயற்சிகளில் பிற்போக்குத் தனங்கள் தவிர்க்கப்படமுடியாதெனும் வரட்டுவாதத்தையும் மறந்துவிட்டீர்களா?

இயக்கங்களே! இந்த இனந்தெரியாத தன்மையை தெளிவுபடுத்துங்கள், விசாரணை செய்யுங்கள், பதில்கூறுங்கள்.

மக்களே! நியாயம் கேட்க, கலைமகளை நாளை நிறுத்த, தனிநபர் பயங்கரவாத நிகழ்ச்சியை கண்டிக்க தயங்காது முன்வாருங்கள்.

மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்




தொடர்கின்றது ரத்த வெறியாட்டம்

Published by TELO, 2 The Grove, Golders Green, NW11 Printed by Astmoor Litho Ltd (TU), 21-22 Arkwright Road, Runcorn, Cheshire